போல யித்தையானசகத்துந்தானேயென்றுஇவ்வி
தமுத்தியைச்சமநிச்சயித்தல்காரியம்-சர்வமும்பிரம
மயமாய்ப்பட்டதாற்கட்டற்றுநிற்கின்றது அவதி
யென்பார்-அதனெறியாலுங்கிலெல்லாம் பிரமமே
ன்றேயுந்திருக்குருத்தலைமைத்தாமெனவுங்கூறினர்.
(௬-ம்) மூவகைக்கிருத்தியங்களாவன தாரித்திரி
யநோய்முதலாயின் துன்பநீக்குகின்றதற் கேது
வாலயமுதல் தொழுவளாவு ளாணிடம்வித்ததிற்ப
மாகிய இகலோககிருத்தியமும் - நரகதுன்பநீக்கு
கின்றதற்கேதுவான யாகதானதர்ம தவவிரதமந்தி
ரசெபமுதலாகிய பரலோககிருத்தியமும்- ஜனன
மரண துன்பநீக்குகின்றதற்கேதுவான சிரவணம
னனநிதித்தியாசனமாதியாகிய மோட்சகிருத்தியமுமெ
ன்றயிவ-அவதியென்பதை அடிநிலத்தீபகமாகநா
க்கிடத்துக்கூட்டுக.

(௭-ம்) சிச்சடட்வேறாய்வாசனுட்சயமாய் மனோல
யமாட்சொட்சாத்காரமுண்டாகுமென்பதாம்.(௰௩)

வேறு.

(அ-ஸக) வாக்கியநிண்ணயங்கூறல்.

வாக்கியத்னிண்ணயங்கள்வகுக்கின் முதற்ற
ரமாம் வாக்கியநாலாம் வாக்கியவல்லமை யே
தென்றாற் - றாக்குமொழியத்து விதமார்தலிஞலிர
ண்டாந்தர மூன்றாம்வாக்கிய மாந்தத்வமசியென
லா-வாக்கிய மூன்றாந்தரமா மிரண்டாம்வாக்கியந்
தானகெபெல்றே சீடனுரைக்கப் படிகாட்டுதலா
ஞைக்கிடியாவற் வேபிரமமென்றவதனுல்ணி
யநாலாந்தரமா நுவனுமுதல் மொழியே.

(இ-ள்) வாக்கியத்நின்-வாக்கியங்களினுடைய-நி
ண்ணயங்கள்-தரத்தினது நிச்சயங்களை- வகுக்கின்-
கூறுமிடத்தில்- வாக்கியநாலாம்- நால்காம்வாக்கிய
மானது- முதற்றரமாம்-முதலாவதுவகையாகும்.
வாக்கிய வல்லமையேதென்றால் - அவ்வாக்கியத்து
க்கணமாகுந்திறமையாதெனில்- தாக்குமொழி-
பொருந்திய அவ்வாக்கியமானது-அத்துவிதமாத
கின்றால் - அனைத்துமொன்றானவனுபவங்கொடுக்கி
ன்றாகையாலதுவே அத்திறமையாம் மூன்றாம்
வாக்கியம் மூன்றாவது வாக்கியமானது-தத்வமசி
யெனலால்- பிரமநீயென்றுஆசிரியருபதேசித்து
ப்பிரமமாக்கின்றதினால் - இரண்டாந்தரம்-இரண்
டாவதுவகையாகும் இரண்டாம்வாக்கியமானது
அகமென்றே சீடனுரைக்கு-நான்பிரமமென்று சீ

டனுபவஞ் சொல்லும்படி - அப்படி காட்டுத லால் அவ்விதமேலட்சணமாய்த்தெரிவித்தலால். ஆக்கிய மூன்றாந்தரமாம் - வேருக்குகின்ற மூன்றாவதுவகையாகும்- றவதுமுதன்மொழி- சொல்லப்படுகின்ற முதல்வாக்கியமானது- நோக்கியறியாவறிவே- பரோட்சமாயறிந்த பிரக்ஞானமே- பிரமமென்றவதனால்- பிரமசொரூபமென்கின்றதினால்- நண்ணிய கடையான - நாலாந்தரமாம்- நான்காவதுவகையாகும்- எ-று.

(ப-ம்) பொய்யாய்த்தோன்றும் அலையாதிகட்லெயாகின்றதுபோல மித்தையாய்த் தோன்றும் பிரகிருதிமுதலிய ஜகசீவபரங்களனைத்துஞ் சத்தியஞானவனந்தானந்த சொரூபமான தன்னை விட வேறல்லவென்றுஒன்றாகின்றவனுபவமென்பார்- அத்துவிதமென்றார்.

(இ-ம்) அப்பியாசிக்கும்பொருட்டுவாக்கியங்களினுயர்வுதாழ்வுதெரியக்கூறியதாம். (௰௪)

(அ-கை) வாக்கியவுபதேசத்தினால் மோட்சமடைந்தோர்கள் கதைகூறல்

(கவி) கோகிலகதைமுதன் மொழியாற்குச்சரியநாட்டிற்கே வதைசெய்சக்கிலியன்குறை கடவிரித் தடைந்தா -னிதிபிரண்டாமொழியாற் கெர்ப்ப்பணிபெருருவாய் நிசிசரன்றன்பவமகற்றி தே

ர்மையில் வீடடைந்தான் - சோதி செய்மூன்று
மொழியா லஞ்ஞானச்சுதராற்றன் புறவேடுவச்
சிபாசுக மடைந்தாளிவையே - யோதிய நால
மொழியா லந்தணன் செய்வினையா லுதவியிலாட்
புசிப்புதவியுயர்ந் தடையுங்கதையே.

(இ-ள்) கோதில்கதை-குற்றமற்றவாக்கியகதை
யைக் கூறுமிடத்து-முதன்மொழியால்-முதலாவ
துவாக்கிய வனுக்கிரகத்தால் - குச்சரியநாட்டில் -
குச்சலியதேசத்தில்- கோவதைசெய் சக்கிலியனோ -
பசுக்கொலை செய்துவந்தவோர் சக்கிலியனானவ
ன் குறைகடவிர்ந்து - அக்கோகத்திபாவமுதலிய
மோட்சப்பிரதிபந்தமான குறைபாடுகணீங்கி - அ
டைந்தான்-விதேகமுத்திபெற்றான் - கெர்ப்பணி
யே-கருப்பந்தரித்த ஓர்ஸ்திரீயே - நீதிகுருவாய்
நியாயமன சற்குருவா யனுக்கிரகித்த - இரண்
டாமொழியால் - இரண்டாம்வாக்கியத்தால் - நிசி
சரன் - ஓரிராக்கதன் - தன்பவமகற்றி தனது ஜன
னமரணத்தைநீக்கி - நேர்மையில் வீடடைந்தா
ன்-ஒப்பற்றமுத்திபெற்றான் - அஞ்ஞானச்சுதரா
ல்-அஞ்ஞானமுதலியபிள்ளைகளால் - துன்புறுவே
வெச்சி - துயர்மன்மான வேடிச்சி - சோதிசெ
ய்மூன்றுமொழியால் - சுயம்பிரகாசமாகுகின்ற
மூன்றாம்வாக்கியவனுக்கிரகம் பெற்றதால் - பர

சுகமடைந்தான் - பேரின்பம்பெற்ருன்-அந்தண ன்செய்வினையால் ஒரு பிராமணனுனவரேவற்ப ணிசெய்து - உதவியிலாப் புசிப்புதவி - கொடுக் கக்கூடாத போகத்தைக் கொடுத்து - ஓதியநாலா மொழியால்- அநு கிரகித்தநாலாம்வாக்கியத்தா ல்-உயர்ந்தடையும் - மேலானமுத்திபெற்ருர்-இ வையே-இவைகளே-கதை - வாக்கியத்தால்மோட் சம்பெற்ளுேர் சரித்திரங்களாம்.

(பதம்; ஏகாத்ம புத்தியைக் கொடுக்கின்றமற் றைக்கதைகளுக்குள் வகுற்றமின்றியகதைகளென் பார்- கோதில்கதையென்ருர்.

(வி-ம்) குச்சரியதேசத்திற் கதிபதியாகிய தாளு க்கராசன் அரண்மனைச் சமையலுக்காகதினந் தோறும் (௫ா) பசு வதைசெய்துவந்த வோர்சக் கிலியானவன் அவ்வரசன்ஒருகாலத்தில் வேட்டை க்குப்போனபோது கூடப்போகச்சே ஓர்நதிக் கரையில் ஓர்மகாத்மாகோகத்தி புராணம் வாசித் து அதிற்பசுக்கொலைபிசைசெய்யக்கூடா தென்று ம் பசுவானது பயிரைத்தின்றல்முதலியதீங்குசெ ய்தாலப்போதும் தெட்டியைத்தோல்சீவிஅதை க்கொண்டு தண்டித்து விலக்கவேண்டுமென்றும் அப்படியன்றி வேறுவிதமாய்த் தண்டித்து வொ ருரோமமாவது உதிர்ந்தால், ரவுரவாதிநரகப்பிரா

ப்தியுண்டாமென்றுஞ் சொன்னதை அந்தச்சக்கி
லியன் பூருவசன்மத்துப் புண்ணிய பரிபாகத்தா
ற்கேட்டுத்தினமொன்றுக்கு - ௫௱ - பசுவாகஅந்
தப்பசுக்களைக் கொன்றிருப்பதாற்றன் செய்தபா
வத்துக்களவில்லையென்றும் எந்தவிதத்தில் தீரப்
போகுதென்றும் பயமடைந்து அந்த மகாத்மா
வின்பாதத்தில் வணங்கித்தனது பாவகிருத்தியங்க
ளெல்லாந்தெரிவித்து அப்பாவநீங்கி நற்கதியடை
யச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்
ய அந்தமகாத்மா இவ்வளவு அதிபாதகனைப் பார்க்
கவுங்கூடாதென்று தமது கிருகத்துக் கெழுந்து
போய்ப்பின் வாசல்வழியாகச் சஞ்சரித்துக்கொ
ண்டிருக்க அவ்வொழுந்து போம்பாதுபின்றேல
கூடச்சென்ற அந்தச்சக்கிலியனானவன் அவர்கிரக
த்துக்குமுன்வாசலில் அவரதருளைநாடிக்கொண்டு
அன்னாகாரமில்லாமல்நிற்க இவ்விதமோர்மண்ட
லஞ்சென்றபோது அம்மகாத்மாவின்பத்தினியா
ர் அச்சக்கிலியன் நிற்கின்றதை நோக்கி - அவனுக்
கனுக்கிரகஞ்செய்யும்படி அவரிடத்தில்விண்ணப்
பஞ்செய்ய அவர்இவன் அளவற்ற கோகத்திக்கா
ரனதாற் கூடாதென்று கூறினதற்கு அவ்வன்னை
யார் பரமாத்மாவாகிய தேவரீரை யடைந்தும்
இவனுக்குப்பாவம் நீங்காதிருக்கலாமா இன்னஞ்

சிலநாழிகையில் அவனிறந்துபோகின்றதாயிருப்பதாலும் பசுக்களைக்கொன்றுதின்றதும்பாவமும்மற்றெல்லா முஞ்சுவாமியாயிருப்பதாலும் அனுக்கிரகிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய - அதின்பேரிற்சம்மதித்து அந்தமகாத்மாமுதல்வாக்கியத்தை யனுக்கிரகம்பண்ண அதைக்கேட்டு அந்தச் சக்கிலியனானவன் கோகத்திப்பாவமும்நீங்கித் தத்துவஞானமும்பெற்று விதேகமுத்தியடைந்ததே முதல்வாக்கியகதையெனவும்.

ஓர்ராக்கதனானவன் வனத்தில்வருகின்றஜனங்களைப்பிடித்துப் புசித்துக்கொண்டிருக்குங் காலத்தில்ஓர் பிராமண கெர்ப்பஸ்திரீயானவள் அந்தவனத்தில்வர அவளைப்பிடித்துக்கொல்லத்தொடங்கினபோது உனக்குப்பசிதீர வேண்டியதே பிரதானமாகையால் நீயென்னைக்கொன்று புசித்தபின்பிறகுநானிப்போ துபதேசிக்கின்ற மந்திரத்தா லென்னையெழுப்பி விட்டுவிடென்று வோர்மந்திரமுபதேசிக்க அவ்வரக்கனந்தப்படி அவளைக்கொன்றுதின்று அம்மந்திரத்தாலெழுப்பி அப்பால் நிதட்டினாக்காகவனத்தில் அலையவேண்டுவதில்லையென்றுஅவ்வாறேகொன்றுதின்று எழுப்பிவர அதுளவள்மிகவுந் துன்புற்றுப் பிரமாவையுபாசிக்க அவர்பிரசன்னராய்சனனமரணதுன்பம் நீங்கும்

படியா யிரண்டாம்வாக்கியத்தை யனுக்கிரகிக்கஅ
தைஅவன்கேட்டுப்பிரமஞ்ஞானம் பெற்றதுந்தவிர
ரஅவ்வரக்கனுக்கும்உபதேசிக்க அவனும்அதன்மூ
லமாய்த் தத்துவஞானம்பெற்றுமோட்சமடைந்த
தேயிரண்டாம்வாக்கியத்தையெனவும்

ஓர்வேடஸ்திரீக்கு அஞ்ஞானம் ஆவரணம் விட்
சேபம் மாயையென்னும் நான்குபிள்ளைகள்பிறந்து
அப்பிள்ளைகளான்மிகுந்த துன்பத்தை யடைந்து
அதைநீக்கிக்கொள்ளும்பொருட்டு அப்பிள்ளைகளு
டனே மகாத்மாக்களிருக்குமிடந்தேடிப்போயொ
ர்மகாத்மாவைக்கண்டு தன் துன்பத்தைத் தெரிவித்
து அந்தப்பிள்ளைகளை யொப்புவிக்கவே அந்தமகா
த்மா அவளுக்குமூன்றாம்வாக்கியமநுக்கிரகஞ்செ
ய்ததால் - அவள் தத்துவஞானம்பெற்று மோட்ச
மடைந்ததேமூன்றாம்வாக்கியத்தையெனவும்.

முமூட்சுவான ஓர் பிராமணர் ஒருமகாத்மாவை
க்குருவாயடைந்துஉபதேசம்பெற்றுக்கொள்ளும்
பொருட்டுப் பணிவிடைசெய்துக்கொண்டிருக்கு
ங்காலத்தில் அந்தமகாத்மா ஒருநாள்தாகத்துக்குச்
சலங்கொண்டுவரச்சொல்ல அக்கிடம்போயிருக்
ம்போது அவர் பரிபூரணதிசை யடைகிறசமய
யநேரிட்டதால்- நாலாம்வாக்கியத்தை மனையிலெ

எழுதிவைத்துப்போட்டுப் பரிபூரணமாய் விட்டார் அதைப்பார்த்திருந்த ஓர்கூத்தாடிச்சி அவ்வாக்கியத்தைத் தன்காதோலையிலெழுதிப் போட்டுக்கொண்டு இம்மணியி லெழுதியிருந்ததை யழித்துப்போட்டுப்போனபின்பு அந்தச்சிட்டரானவர்வந்து குருபரிபூரணமாய் விட்டதையும் மணியிலெழுத்தழிபட்டிருந்ததையுங்கண்டு அக்கித்துப்பக்கத்தில்நின்றவர்களால் தங்குருவெழுதின வாக்கியத்தைக்கூத்தாடிச்சி காதோலையி லெழுதிப்போட்டுக்கொண்டு போனது தெரிந்து அக்கூத்தாடிச்சியிடத்திற்போய் அவள் அந்தவாக்கியத்தை மனோரம்மிய மாய்க்கொடுக்கப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு அவளிடப்பணிவிடை யெல்லாஞ் செய்துக்கொண்டுவரும்போது அவள் காதில் அவ்வாக்கியமிருந்த மகிமையினால் அவள்பேர் பூமியிற் பிரசித்தமாகி யொருராஜாவிடத்திற்போய்க் கம்பநாட்டியத்தி லேறி யாடும்போது அவளுக்குத் தாகமெடுத்துத் தண்ணீர்கேட்க அந்தப்பிராமணரான பணிவிடைக்காரர் ஒருசெம்பிலேந்திக்கொண்டுபோய் உயரநீட்ட அவ்வாக்கியமகிமையால் அக்கூத்தாடிச்சிகையிற்போய்ச்சேர்ந்ததாகும் - அவள்தாகத்துக்குச் சாப்பிட்டுவிடவே செம்பைக்கீழேவிடவே அந்தப்பிராமணரது பணிவிடைமகிமையால் அவர்கையில்வந்துசேர்ந்ததும் அ

ந்தராசாவானவன்கண்டு அந்தப் பிராமணனை அ
ழைத்து அந்தச்செப்பு வுபரப்போனதும்வந்தது
ம்யாதென்றவனை வினவ அப்போது அந்தப்பிராம
ணர்தன் குருவெழுதின வாக்கியம் அவன்காதிலி
ருக்கின்ற மகமையினுமவன்மனோரட்சியமா
யலதக் கொடுக்கும்பொருட்டுத் தான்செய்தவரு
கின்ற பணிவிடையினு மென்றுகூற அதைக்கேட்
ட அந்தவரசன் அக்கூத்தாடிச்சியை வரவழைத்து அ
வளுக்குவேண்டிய திரவியத்தைக்கொடுத்து அவள்
மனோரம்மியமாய் அந்தக்காதோலையை அப்பிராம
ணருக்குக் கொடுக்கும்படிசெய்ததால் அவரதைவா
ங்கி அந்தநாலாம் வாக்கியப்பிரசாதத்தால்தத்துவ
ஞானம்பெற்று பரமோட்சமடைந்ததே நாலாம்
வாக்கியக்கதையெனவுங்கொள்க.

இதல்லாமற் பாடபேதமாய்ச்சில பிரதிகளில்இர
ண்டாம்வாக்கியத்திற்குக் கதைசொல்லி யிருப்பதி
ல்-கெற்பணிசெய் குருவாமென்பதற்குக்கதை-ஒரி
ராக்கதனானவன் வனத்தில்வருகின்ற சனங்களில்ஞா
னியாயுள்ளோரையறிந் தனுக்கிரகம் பெரும்பொ
ருட்டுநீயார் எங்கேயிருக்கிறதென்றுகேட்டு அதற்
குச் சொல்லுகின்ற உத்தரத்தால் அஞ்ஞானிகளா
ய்க்காணப்பட்ட பேர்களையெல்லாங் கொன்றுதி
ன்றுவருகையில் ஒருதினமோர் கெர்ப்பஸ்திரீயு

[illegible] அவனிடத்திற்போய் நீயார் எங்கேயி
[illegible] கேட்டபோது அவனவனைக்கண்ட
[illegible] மடங்கிநிற்க அப்போது அவன்வயிற்றி
[illegible] நாம்பிரமமென்றுடம்புரனையா
[illegible] அதைக்கேட்டு அவ்வரக்கன்
[illegible] வாகக்கருதி அந்தகோட்பஷி
[illegible] போயிக் காப்பாற்றி அக்குழந்தை
[illegible] இரண்டாம்வாக்கிய வனுக்கிரகம்பெ
[illegible] முத்தப் பரமோட்ச மடைந்த
[illegible]ம்.

[illegible] வாக்கியத்துக்கு வேறொரு விதமாய்ச்
சொல்லப்படுகிறகதை - யொருபிராமணராயிரு
[illegible] சாதமாய்ச்சமைத்துச்
[illegible] பராட்ச்செய்து நாத்தக்க-கந்
[illegible] விவாகஞ்செய்துக் கொள்ளவே
[illegible] சொஞ்சமணனு மொருசெங்க
[illegible] தேடிப்போன விடத்தில்
[illegible] படையபெண்ணில்லாமல்குத்
[illegible] பெண அம்மணையுஞ்செங்கல்லி
[illegible] வெசாநமுத்துவைய துடா
[illegible] அதல்பேரில் அப்பெண்ணை
[illegible] கொள்ள அவள்பணிவிடைசெய்
[illegible] காலத்தில் அவனுக்கு நாலாம்

வாக்கியத்தை அனுக்கிரகஞ்செய்ய அதனால் அவன்
நத்துவஞானம்பெற்று மோட்சமடைந்ததெனவு
ங்கூறுவாருளர்.

இங்ஙனம் வாக்கியங்களைவேறுபட்டிருப்பானேன்
எனில் - சுருதியில் இந்நான்கு மகாவாக்கியத்தா
லோவ்வொரு வாக்கியத்தினால் அனேகம்பேர் மோ
ட்சமடைந்திருக்கின்ற அனேகங்கதைகள் கூறப்ப
ட்டிருப்பதாலும் அவைகளின் முன்னோர்கள் அவரவ
ரானுக்குச் சம்மதமானவைகளையே யெடுத்துவெளி
ப்படுத்தியிருப்பதாலும் வேறுபட்டிருக்கின்றதெ
னவுமறிக.

(௩-ம்) நாலுவாக்கியங்களையும் விசுவாசித்து அ
னுஷ்டிக்கும்படியாயதிலதிலடைந்தோர் கதைக
ளைக்கூறியதாம். (௰௫)

(௪-வகை) வாக்கியவப்பியாசஞ் சித்திக்கும் பொ
ருட்டுச்செய்யுந் தியானங்கூறல்.

(௧௬) இந்தவகைப்படியே தியானமுதன் மொ
ழிக்காமெந்தை பரகுருத்தியானமிரண்டாம்வாக்கி
யத்துக், கந்தமிலாவறிவது வேதானாகியிருந்தங்க
கண்டமெலாம் பிறித்தறிந்த லனுபூதியதனாற், றந்
தொமசியெனு மொழிக்கேதக்க தியானந்தான் றன்
னறிவிற்கண்டமுந்தானகண்டமுமாயிருத்தல், கந்
துமறநாலாம் வாக்கியத்தியான மகண்டாகாரமயி

ருக்கிலைவல கவல்யத்தியானம்.

(இ-ள்) இத்தகைகைப்படியேதியானம்- இவ்வண்ணமே மோட்சமடைவதற் கப்பியாசிகள் செய்யவேண்டிடதியானத்தைக் கூறுமிடத்தில் - முதன்மொழிக்கு - முதல்வாக்கியவப்பியாசஞ்சித்திக்கின்றதற்கு-எந்தை - எமதுபிதாகிய- பரகுருத்தியானமாம் - மேலான ஞானதேசிகருடைய திருமேனியைத்தியானித்தலாகும் - இரண்டாம்வாக்கியத்துக்கு - இரண்டாம்வாக்கியவப்பியாசஞ் சித்திக்கின்றதற்கு-அசிதமிலாவறிவு - நாசரகிதமான கூடஸ்தர்-சாறுதி - தனதுசொரூபமாகி - அதுவே-அக்கூடஸ்தரூப தானே- அகண்டம்- வியாபகமான சர்வசாட்சியாக-இருந்து-உயர்ந்து- அங்ஙனல்-அவ்வுணர்வினுல் - வலாம்பிறிந்தறிதல்-தேகாதிப்பிரபஞ்சமனைத்தையும் வேறுபடுத்தியுணர்தல்-அனுபூதி-தியானமாகும் - தத்தொமசியெனுமொழிக்கு அதிற்பாருவென்னும் மூன்றாவது வாக்கியவப்பியாசஞ்சித்திக்கின்றதற்கு - தானகண்டமும்.- தான்பூரணமானமெய்யாயும் - தன்னறிவிற்கண்டமுமாயிருத்தல் - அறிவுசொரூபமாகின்றதன்னிடத்தினுண்டான பிரபஞ்ச மனைத்தும் பரிச்சின்னமான பொய்யாயுமறிந்திருக்கின்ற - தக்கதியானம்- இதுத்தியானமாகும்-சத்தமறு-பிரபஞ்சப்பொய்யெ

என்கிற வாசனையின்றி - அகண்டாகாரமாய் - பூரண சொரூபமாகவே - இருத்தல் - இருக்கின்றது - நாலாம் வாக்கியத்தியானம் - நான்காவதுவாக்கியப்பிரயோ சனஞ் சித்திக்கின்றதற்குத்தியானமாகும் - இவை - இந் நாலாம்வாக்கியத்தியானமே - கைவல்யத்தியானம் சாட்சாத்கார மோட்சங் கொடுக்கின்ற தியானமா கும் - எ - று.

(ப-ம்) சிடன்அற்பபுத்தி யுடையவனாகையாலு மறிவுஅபரோட்சமாகாமையாலுஞ் சுருதியில்நீரா லாங்கட்டியாய்த் தடித்ததுபோலஅறிவேகுருமூர் த்தமாகுமென்றுதெரிவித்தலாலுங்குரு திருமேனி யைத் தியானிக்கவேண்டுமென்பார் - எந்தைபரகு ருத்தியானமென்றார்.

(இ-ம்) இன்னவாக்கியசித்திக்கின்னவிதத்தியானி த்தலைக்கூறியதாம். (மகா)

(அ-கை) முதல்வாக்கியவுரைகூறல்.

(கலி) ஞானமேபிரமமென்ற முதன்மொழியின் பயன் கேளுச்செவிகண் மெய் மூக்கு நயந்தபொ றியதனாலானசுவையோசையொளிபரிசம்வாசனை யாலறிவதுவே ஞானமதிற்பிரகாசமுரைக்கில் - வா னிரவிதிங்களங்கி பிரகாசமதிலுமலர்விழிகள் பிரகா சமனமதிற் பிரகாசந்-தானமுறுசிவனதிற்பிரகாச மதிலுந் தன்னறிவே பிரகாசந்தானமெனவறிமெய

(இ-ள்) ஞானமே பிரமமென்ற- பிரக்ஞானமே பிரமசொரூபமென்று முதல்வேதத்திற்கூறிய- முதன்மொழியின் - முதலாவதுவாக்கியத்தின்-பயன் அருத்தத்தை - கேள் - இயாங்கூறுது நீகேட்பாய்- நயந்த-விடயத்தைவிரும்புகிற - நா-சிங்குவை-செவி-சுரோத்திரம்-கண்-சட்சு-மெய்-துவக்கு-மூக்கு ஆக்கிராணம் - பொறியதனால்- ஆகியபஞ்சேந்திரியங்களில்வழியாக - ஆன-இடையிற்கற்பிதமாயுண்டான-சுவை-இரசம்-ஓசை-சத்தம்-ஒளி-ரூபம்-பரிசம்-பரிசம்-வாசனையால், கந்தமாகியபஞ்சவிடையங்களை-அறிவதுவே-அறிகின்றவறிவெதுவோ அதுவே-ஞானம்- ஞானமென்னும் பதத்தினருத்தமாம் (அறிவுபிரகாச வியல்பியாதெனில்) அதின்பிரகாசம்-அவ்வறிவின் விளக்கத்தை - உரைக்கில்- சொல்லிடத்தில்-வானிரவி - ஆகாயத்திற் சஞ்சரிக்குஞ்சூரியனும்-திங்கள்-சந்திரனும்-அங்கி-அக்கினியும்-பிரகாசம்-உலகத்திற்பிரகாசமென்றுசொல்லப்படுவதாம்-அதினும்-அவைகளினும்- மலர்விழிகள்-விகசிதமான நேத்திரங்கள்-பிரகாசம்- அதிகவொளியுடையதாகும்-அதின்-அவைகளினும்-மனம்-அந்தக்கரணமானது பிரகாசம்-அதிகதேஜசுடையதாகும் அதில்-அதனினும்-தானமூறு- ஓரிடத்திற்பற்றிவிளங்கின்ற-சிவன்-ஈசுரபோதன்-பிரகாசம்-அதிகதேஜ

திபுடையதாகும் - அதிலும்- அச்சிவனிலும்-தன்னை
திவே- சுயஞ்சைதன்னியமான சாட்சியே - பிரகா
சத்தானமென - எல்லாவற்றினு மதிகமான அதிட்
டானப்பிரகாசமென்பதாக - அறி-தெரிந்துக்கொ
ள்வாய்-எ-று.

(ப-ம்) சூட்சும பூததாமத குணத்திலுண்டான
தூலபூதபவுதிகங்களுக்குள் சூரியாதிகள் அக்கினிய
ம்சம் மிகுந்துடையதென்பார் - வானிரவிதிங்கள
ங்கி பிரகாசமெனவும் - அக்குணத்துக்கு மேலான
சத்துவகுண வியட்டியிலுண்டானதாயுஞ் சூரியா
திகளைவிளக்கி யறிவதாயுமிருக்கின்ற சட்சிந்திரியம
திலுமதிகப்பிரகாசமுடையதென்பார்- அதிலுமல
ர்விழிகள் பிரகாசமெனவும் - அச்சத்துவகுண சமட்
டியிலுண்டானதாயுஞ் சட்சிந்திரியாதிகளைவிளக்கி
யறிவதாயும் அவைதொழிற்படுவதற் கேதுவாயுமி
ருக்கின்ற அந்தக்கரணமதிலுமதிகப்பிரகாசமுடை
யதென்பார்- மனமதிற்பிரகாசமெனவும்-சூட்சும
பூதத்திற்குக்காரணமான மூலப்பிரகிருதியின் தாம
தகுணத்துக்குமேலான இராசதகுணத்திலுண்டா
னதாயு மந்தக்கரணமுதலானதைவிளக்கி யறிவதா
யுமவைதொழிற்படுவதற்கேதுவாயுஞ் சாக்கிரத்திற்
புருவமத்தியிலும சொப்பனத்திற்கண்டஸ்தானத்
திலும்- சுழுத்தியிலிருதயஸ்தானத்திலும் ஹிருதயத்

இஃநாயிறினும் விளக்கப்பட்டதாயிருக்குஞ்சிதா
பாசம் அதினும் அதிகப்பிரகாச முடையவனென்
பார்- ஞானமூர்த்தி சிவனை நிர்ப்பிரகாசமெனவும்- உற்ப
த்தியில்லாததாயுமாயோபப்பிரகாசங்களுக்கு அதி
ட்டானமாகும் சிவஞானத்தை விளக்கிடுகின்ற
கும் மலங்கள் தொழிற்படுவதற்கேதுவாயிருக்கு
ஞ்சைதன்யமான சாட்சியே எல்லாவற்றினும் மதி
கப்பிரகாசமுடையதென்பார் - தன்னறிவே பிரகா
சத்தானமெனவுங்கூறினர் (௫)

(வி-ம்) இடனெறியோயிருந்து கேட்டுக்கொண்டி
ருக்கவும் ஆசிரியர்கேளென்றது விசேடமானகாரி
யஞ் சொல்லப்போவதால் வேறுசிந்தனையற்றுச் சித்
தமேகாக்கிரதைப்படும்படி அபிமுகப்படுத்திக்கொ
ண்டதெனவறிக.

(இ-ள்) ஞானமென்னுமுதற்பதத்துக்குரைகூறி
த் தொரியாதியிட்டப் பிரகாசமுஞ் சுயவறிவான ஆத்ம
ப்பிரகாசத்தில் பிரதிபிம்பமெனத் தெரிவித்ததாம்.

(அ-கை) ஆக்ஷேபவபானதிற்று கொள்வதென்
னைமெனின்.

(கவி) அவ்வறிவையறிவிக்கும் வகையுண்டாக்கிடுட
லேடறிவாகுமெனிற் பொறிகளோர்ந்து யிலாதறிவாக்
கண்விபவித்திரியர்தா னறிவென்றுலந்தக் கரணயி
லொக்கறியாதகரணமறிவென்று, லெவ்விடயந் தானே

நிந்துந்தனை யறியாததனை யெழுந் தெவருட்டுவிக்கு
ஞ்சீவனறிவென்றால், வவ்வியதானல்லாத வெல்லா
ந்தானென்றே மயங்குமதைப் பருத்தறியவந்தவ
றிவறிவே.

(இ-ள்) அவ்வறிவை-அந்தவதிட்டான ஞானசொ
ரூபத்தை-அறிவிக்கும்வகை - தெரிவிக்கின்றவிதந்
தை-உரைக்கின்-விளம்புமிடத்தில் உடலே-தேகமே
அறிவாகுமெனில்- ஞானசொரூபமாகுமென்றால்
பொறிகளைந்துமிலாது - பஞ்சேந்திரியங்களின்றி-
அறியா-தேகமொன்றையு மறியமாட்டாது- கவ்வி
ய-விடயங்களைப்பற்றுகின்ற - இந்திரியம்- பொறி
கள்-அறிவென்றால் - உணர்வாகுமென்னில்-அந்தக்
கரணமிலாது- அந்தக்கரணமின்றி- அறியாது- இந்
திரியங்க ளொன்றையுமறியமாட்டாது-கரணம்-அ
ந்தக்கரணமானது-அறிவென்றால்- சைதன்னியமா
குமென்னில்-எவ்விடயம் - சத்தாதிகளெந்தவிடய
த்தையும்-தானறிந்தும்- அந்தக்கரணமானதுணர்ந்
தும்-தனையறியாது - தன்னைத் தெரிந்துக்கொள்ள
மாட்டாது-அதனை- அவ்வந்தக்கரணத்தை- எழுந்தி
வன்-அழகுபொருந்திய சிதாபாசனானவன்-ஆட்டு
விக்கும் - அசைப்பிப்பன்-இவன் - அச்சிதாபாசனா
னவன்- அறிவென்றால்- சித்தாகுமென்னில்- வவ்வி
ய-கவருகின்ற-தானல்லாத அச்சிதாபாசனையிரா
வெல்லாம் - அந்தக்கரணாதியனைத்தையும்-தானென்

றே-நானென்கிறதாக-மயங்கும்-மோகிப்பன்
ன்னை அறிவுதானியாதெனில் - அதை-அச்சிதாப
சனை-டுத்தறியவந்த பிறித்துணருகின்ற - அறி
போதமேஅறிவுஅதிட்டானஞான சொருபமாம்
(ப-ம்) தேகாத்மாவாகிய அறிவென்று சுருதி
ருப்பதாலுந் தன்னைச்சூழ்ந்த பதார்த்தங்களையு
தல் வனிதாதிபோகங்கள் தனக்கு வேணுமென்று
சம்பாதித்து அனுபவித்தல் சூரியனில்லாவிடி
லோகவிவகார நடவாமைபோற் சரீரமில்லாவிட்
டாலிவைகட்குப்பிரயோசன மில்லாதிருத்தல்மு
தலியயுத்தியிருக்கையாலும்-சகலரும்சரீரம்பொ
சிக்கின்றதையேநான் பொசிக்கின்றேனென்றும்
நான்பிராமணனிவன்னம் பிரமச்சாரியாதியாச்சி
ரமம்பிறந்தன்முதலியவை யுடையவனென்றுஞ்
சரீரமே அறிவாய்ப்பேசு மனுபவமிருக்கையிலு
மச்சரீரமே யறிவாகுமென்னில் தேகமறிவல்ல
வென்று அனந்தஞ்சுருதி யிருப்பதாலுஞ் சூரிய
னஸ்தமனமானாலு லோகவிவகாரம் நடவாமை
போல - மரணமூர்ச்சையால் ஞானேந்திரியங்க
ளில்லாதபோது தேகமிருந்துந் தன்னைச்சூழ்ந்த
பதார்த்தங்களை யறியாதிருத்தல்வனிதாதிகளையறி
ந்து அனுபவிக்காதிருத்தல் அவைகள் பிரயோச
னமில்லாதிருத்தல் முதலியயுத்தி யிருப்பதுமல்

லாமல்தூங்கினாலே கட்டுண்டயானை முதலியதை
ப்போலவிருத்தல்யோகிகள் கூடுவிட்டுக்கூடுபா
ய்தல்சொப்பனத்திலிவ்வுடலன்றித் தொழில்நட
த்தல் மரணத்தின்பின் உஷ்ணந்தெரியாதிருத்த
ல்நிழல்போலச் சுதந்தரமின்றி பிராணனாலேயா
ட்டியடக்கப்படல் இது தேகமென்றறியப்பட
லாலன்னியமாயுஞ்சூட்சும பூததாமதகுணபரிணா
மமானபஞ்ச பூதத்திலுண்டான தாகையாலுற்ப
த்தியுள்ளதாயும் பிறத்தற்கு முன்னுமிறந்ததற்கு
ப்பின்னுஞ்சுழுத்தி சொப்பனமூர்ச்சை தூஷ்ணீ
ம்பூதாவத்தை யோகஞ் சமாதிகாலத்திலுந் தேக
நினைப்பு வருகிறதற்குமுன்னும் பின்னுமில்லாத
தூர்தவிர அந்நினைவுகாலத்திலும் பஞ்சபூதமாய
பவாதிக்கில அத்தேகமில்லாததால் அசத்தாயுஞ்சு
ழுத்தி நீங்கன்முதலியகாலத்திற் சரீரத்திற்பொரு
ந்தும் - நன்மைதீமைகூடவறியாமையாற்சடமா
யுங்கருப்பாசயப்பையுறுத்தல் முதலியதற்கேது
வாகையாற்றுக்கமாயுங்கரு முதற்றேகாந்தம்வரை
நாலுவருடத்திற் கணந்தோறு மழிவதாயிருப்ப
தால்-அனித்தியமாயும்- நாலுமுழமட்டா யாகா
யத்தைக்குறித்தேயிவ்வளவென்றுசொல்லக்கூடா
த அற்பமாயிருப்பதாற் கண்டமாயும் நவத்துவா
ரத்திலுமல மொழுகல் முதலியதால் அசுத்தமா

யும் - பிறத்தல்முதலியசட்பாவ விகார மிருக்கை
யால் - விகாரமுள்ளதாயும் - வாலீப மாதியவஸ்
தைமுதலிய தங் கடம்போலத்தெரிதலாற் றிரி
யமாயுமிருக்கின்றபுத்தி யிருப்பதாலும்- என்சரீ
ரம் போசிக்கின்றதென்றும் என்சரீர மின்னவஸ்
தைமாதிபிறத்தல்முதலிய தடைந்ததென்றும் பே
சுகின்ற வனுபவ மிருப்பதாலுந் தூலதேகமும்
இதன்றிப் பிராணாதிவாயு கன்மேந்திரியங்களை
யறிவென்று கருதி யிருப்பதாலும் பிராணனீங்கி
னவுடன்றேகம் பிணமாதல் - சகலவிந்திரியமும
டங்கின சுழுத்தியிலும் பிராணனிருத்தல்காற்றுள்
ளபோது கப்பலோடுதொழில் நடத்தல்போல்பி
ராணனுள்ளபோது சரீரவிவகாரநடக்குதல்முத
லியபுத்தியிருப்பதாலும்நான்பிலவான்பசியுடை
யவன் பேசினேனென்பதுமுதலிய வனுபவமிரு
ப்பதாலும் பிராணாதிகளையறிவென்னிற் பிராணா
திவாயுகன்மேந்திரியங்களறிவல்லவென்றனந்தஞ்
சுருதியிருப்பதாலுஞ் சமாதியோக மூர்ச்சைகா
லத்திற்பிராணனில்லா திருந்துந் தேகம்பிண மா
காதிருத்தல்கப்பலிற்பாய்கட்டுமா னில்லாதபோ
து காற்றிருந் கப்பலோடுந் தொழினடவா தது
போல மனமில்லாத, சுழுத்தியிற் பிராணனுடற்
சுவலாயிருந்து மதனாற் சரீரவிவகார மென்று

நடவாதிருத்தல் அதுபிணம்போல மூட்டைகட்டி
த்தலாதியையறியாதிருத்தல் முதலிய யுத்தியிருப்
பதுமல்லாமல் ரதத்தையிழுக் குங்குதிரைசெல்
லுமிடத்தை யறியாததுபோலப் பிராணன்வசமு
றிதொழில் நடத்தலையறியாதிருத்தல் மனதினுலா
ட்டியடக்கப்பட இதுபிராணனென அறியப்ப
டலாலன்னியமாயுஞ் சூட்சும பூதராசதகுணத்தி
ன் சமஷ்டிவியஷ்டியினுண்டானதாகையானுற்ப
த்தியுள்ளதாயும் முன்பின்னில்லா மன்மத்தியினு
மதன்காரணமாக வபவாதிக்கில்அப்பிராணனியில்
லாததால் அசத்தாயுஞ் சுழுத்திசொப்பனமுதலி
யதிற் பாம்பாதிவருதலும் மூக்குத்தியைக் கழற்
றுதலுஞ் சுவாசமின்னபக்கமோடுதென்பதுமறி
யாமையாற் சடமாயும் பசிதாகந் தலையிடிவயிற்
றுவலிமுதலியதாற் றுக்கமாயுஞ் சுவாசங் கழிதல்
வசனுதிபோய்தலால் அனித்தியமாயுந் தேகத்து
க்குட்பிசிவாயிருத்தலாற் கண்டமாயும்எப்பமுக
வியதால் அசுத்தமாயும் மூலாதாரத்திலிருந்துண்
டாதல் முதலியவிகார மிருக்கையால் விகாரமுள்
ளதாயுந் தளர்ச்சிதையறியப்படுதலாற்றிரிசியமா
யுமிருக்கின்ற யுத்தியிருப்பதானும் என்பிராணனி
யென்பதுமுதலிய வனுபவமிருப்பதானுப்பிரா
ணனிவாயு கன்மேந்திரியங்களும் அல்லவென்பா

ரீஉடலேயறிவாகுமெனிற் பொறிகளைந்து மில்லாததறியாவெனவும்.

சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களே அறிவென்னுஞ் சுருதியிருப்பதாலும் ஆட்டுகின்றவனுள்ளபோது பாவையானது கூத்தாடுவதுபோல இந்திரியங்களுள்ளபோது சத்தாதி சகலவிடயமுந் தெரிகின்றது சகலகிருத்தியமுநடக்கின்றதுமுதலியயுத்தியிருப்பதாலும் நான்கண்டேன்கேட்டேன் என்பதுமுதலிய அனுபவமிருப்பதாலும் இந்திரியங்களே அறிவென்னில் சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களறிவல்லவென்று அனந்தஞ்சுருதியிருப்பதாலும் கூத்துக்கு முதன்மையானவனில்லாதபோதுபாவையை யாட்டுகிறவனாலே அத்தொழில்நடவாததுபோல மனோராச்சியத்திலும் அந்தக்கரணமில்லாதபோது இந்திரியங்களிருந்தும் அவைகளாற் சத்தாதிகளிலொருவிடயமுந் தெரியாதிருத்தல் ஒருகிருத்தியமும் நடவாதிருத்தல்முதலியயுத்தியிருப்பதுமல்லாமல் அந்தக்கரணத்தாலாட்டிபடைக்கப்படுதலாலும் மிருகமிதுகாது முதலியதென அறியப்படுதலாலும் மன்னியமாயுஞ்சூட்சும பூதசத்துவகுணவியட்டியிலுண்டானதாகையாலுற்பத்தியுள்ளதாயும் சுழுத்திசொப்பனமூர்ச்சை அஷிணிம்பூதாவஸ்தையோகஞ்சமாதிகால

த்திலும் இந்திரியதினைப்புவருகிறதற்குமுன்னும்
அதுநீங்கின பின்னில்லாததுந் தவிரமத்தியகாலத்
திலுமதன்காரணமாயபவாதிக்கில் அப்பஞ்சேந்தி
ரியங்களில்லாததால் அசத்தாயும்மனோசாச்சியமு
தலானகாலங்களி லெதிர்ப்படும்விடயமொன்றை
யுமறியாமையாலும ஓரிந்திரிய மற்ற இந்திரியங்
களையு மவையின்விடயங்களையு மறியாமையாலு
ஞ்சடமாயும் வெறுப்புவிடயத்தை யறிதலாலும்
விருப்பு விடயத்தை யறியாமையாலுந் துக்கமா
யுஞ் செவிடாதியாய்ப்போதல் கனவாதியில் நீங்
குதல் சத்தாதியை யறிவதோய்தலால் அனித்திய
மாயும் - காதுமுதலியதானத்தில்வேறுவேறுயிரு
ப்பதாற்கண்டமாயும் அசுத்தமான சத்தாதியைக்
கேட்டன்முதலியதால் அசுத்தமாயும் நினைவெழு
ம்போதுண்டாதல் முதலிய விகாரமிருக்கையால்
விகாரமுள்ளதாயும் சத்தமுதலிய விடயத்தையறி
தலுமறியாமையுந் தெரிவதாற் றிரிசியமாயுமிரு
க்கின்றயுத்தியிருப்பதாலும் ஸ்ரோத்திராதிகே
ட்டன்முதலியசெய்த தெனுமநுபவமிருப்பதா
லுமிந்திரியமறிவல்லவென்பார்கவ்வியவிந்திரியந்
தானறிவென்றாலந்தக்காணமிலாதறியாவெனவும்
மனதேயறிவென்று சுருதியிருப்பதினாலும்ம

னதேதேகேந்திரிய பிராணாதிகளைவிளக்கி ரட்சித்
தல்மனது நினைத்தபடியாகுதல் ஆட்டுகிறவனுள்
ளபோது வேடதாரியாடுந்தொழில்நடத்தல்போ
லமனமுள்ளபோது இந்திரியாதியின்விவகாரநட
க்குதல் முதலிய புத்தியிருப்பதாலும் நானிச்சா
வான் அவ்வேலியென்பது முதலியவனுபவமிருப்
பதாலும்மனமேஅறிவென்னில் மனமறிவல்லவெ
ன்றனேகச்சுருதி யிருப்பதினாலும்ஜமானில்லா
தபோது ஆட்டுகிறவனாலே வேடதாரியாடுந்தொ
ழில்நடவாததுபோலப் பித்தமுதலியதாற் புத்தி
யில்லாதகாலத்தில் மனதிருந்துந் தேகாதியைவி
ளக்கிரட்சித்தலு நினைத்தபடியாகுதலுமிந்திரியா
தியின் அறிதல்செய் தலாதிவிவகாரநடத்தலுமில்
லாதிருத்தல் முதலியபுத்தியிருப்பது மல்லாமற்
புத்தியினையொட்டி யடக்கப் படுதலாலு மிதுமன
மெனவழைக்கப்படுதலாலும் அன்னியமாயுஞ்சூட்
சுமபூத சத்துவகுணசமஷ்டியிலுண்டானதாகை
யாலும்பற்றி யுள்ளதாயுஞ் சமாதிசுழுத்தி மூர்ச்
சை உபேட்சைகாலத்தி லில்லாததுந்தவிர மற்றி
யகாலத்திலும் அதன்காரணமாயபவாதிக்கில்அம்
மனமில்லாததால் அசத்தாயும் ஒன்றிற் புத்தியமூ
ர்த்திகாலத்திற் றோன்றியநினைவு சத்தமாதியைய
பிரமைபாற் சடமாயுப்பல விடயங்களை மெய்

போற் கற்பித்து அதிற்காமாதி யுறுதல்முதலியதா
லதுக்கமாயுஞ் சமாதிமுதலிய காலத்திலும் நினை
வோயுந்தோறும் ஒழிதலாலநித்தியமாயும் பிரா
ஞதிக்குள்ளாகவு மந்தக்கரணங்களிலொன்றுகவு
மிருப்பதாற்கண்டமாயும் காமாதிநூர்நினைவுறுத
லால்அசத்தமாயுஞ் சுழுத்தியி லிருந்தூண்டாதல்
முதலியவிவகார மிருக்கையால் விகாரமுள்ளதா
யும்தாமதராசத குணத்தையடைந்து மயக்கமுத
லியதும் இச்சைமுதலியதும் அடைதலறியப்படு
தலாத், திரிசியமாயுமிருக்கின்ற யுத்தி யிருப்பதா
லும் என்மனதென்பது முதலிய அனுபவமிருப்
பதாலும் மனமுட் இதுவன்றியில் புத்தியே யறி
வென்றுசுருதியிருப்பதாலும் புத்தியே யலையுமன
தையுறுதிப்படுத்தல் இகலோக பரலோககாரியங்
களிற் கர்த்தாவாய் நிருமித்தல் வாத்தியாருள்ள
போது சட்டாம்பிள்ளை பாடஞ்சொல்லிக்கொடு
த்துப்பிள்ளைகள்படிக்கும்விவகாரஞ் சரியாய்நட
த்தல்போலப் புத்தியுள்ளபோது மனமுதலியதி
ன்விவகார நடத்தல் முதலாகிய யுத்தியிருப்பதா
லும்நான்புத்திவந்தன் கர்த்தாவென்பதுமுதலிய
வனுபவமிருப்பதாலும் புத்தியேயறிவென்னில்-
புத்தியறிவல்லவென்று அனந்தஞ்சுருதி யிருப்ப
தாலும் பணப்பிரியமில்லாதபோது வாத்தியார்

ஷயிச் சட்டாம்பிள்ளையாலுஞ் சொல்வித்துப்பிள்
ளைகள் படித்தலில்லாததுபோலப் பிரியமில்லாத
காலத்திலும் வேறுவிடயத்திற் பிரியமுள்ள கால
த்திலும் புத்தியானதிருந்து மனதையுறுதிப்படுத்
து மிகலோகபரலோக காரியங்களிற்கர்த்தாவா
ய்நிருமித்தலும் மனமுதலியதின் விவகார நடத்த
லுமில்லாதிருத்தல் முதலிய புத்தியிருப்பதுமல்
லாமற் பிரியமில்லாவிட்டால் நிச்சயித்தல்முதலி
யசெய்யுஞ் சுதந்தர மில்லாமையாலு மிதுபுத்தி
யென்று அந்தக்கரணத்திற்கு மேலானசைதன்யமா
கச் சிவஞானமறியப்படுதலாலும்அட்டியடக்கப்படு
தலாலுமன்னியமாயும் தன்மாத்திரை சத்துவகு
ணசமஷ்டியி லுண்டானதாகையா லுற்பத்தியுள்
ளதாயும் அக்கினிப் பூதாவஸ்தையோகஞ் சமாதி
நித்திரை மூர்ச்சைமுதலிய காலத்திலில்லாதுந்
தவிர மத்தியகாலத்திலு மதன்காரணமாயபவா
திக்கில் அப்புத்தி யில்லாததால் அசத்தாயும்பிரிய
மில்லாதவிடயத்தைச்சரியாக நிச்சயத்தறியாமை
யாற் சடமாயும், தேகாதியின்தர்மமாகியதைத்தன
தென்று அபிமானித்தல், பூரணாத்மாவைக்கர்த்தா
வாதியாகப்பின்னப்படுத்தல், ஒன்றைப்பிறவா
கவறிதல்முதலிய தாற்றுக்கமாயும், யோகமுதலிய
காலத்திலுஞ் சாக்கிரத்திற்றிரீக்ஷணத்தில் நிச்சய

மாறியேயுந்தோறும் ஒழிதலால் அனித்தியமாயு
த்மனதுக்குள்ளிருத்தல் முதலியதாற்கண்டமாயு
ம்இழிவாய் நிச்சயிக்கின்றதால் அசுத்தமாயும் ஓர்
சங்கற்பத்தி லுண்டாதல்முதலிய விகாரமிருக்கை
யால் விகாரமுள்ளதாயும் நவகுணமடைதல் அபி
மானமூறுதல் முதலியது அறிப்படுதலாற்பிரிசிய
மாயுமிருக்கின்ற யுத்தியிருப்பதாலும் என்புத்தி
யென்பது முதலிய வனுபவமிருப்பதாலும்புத்
தியு மறிவல்லவென்பார் காரணமறிவென்று லெவ்
விடயந் தானறிந்துந் தனையறியாததனையெழிற்
சீவனாட்டிவிக்குமெனவும்.

ஆனந்தமயனாகிய சீவனறிவென்பதாகக்கருதி
யிருப்பதாலும் சுழுத்தியிற் புத்தி முதலியதெல்
லாமிறந்து சூனியமாயிருப்பதுமற்தல்சம்பளப்
பிரிய முள்ளபோது வாழைக்காயைப் பழுக்கச்
செய்விக்குந்தொழில் நடத்தல்போல பிரியமுள்
ளபோது புத்தி நிச்சயமுதலியதொழில்நடத்தல்
முதலாகிய யுத்தியிருப்பதாலும் நானறிவே னறி
யேனென்பது முதலியவனுபவ மிருப்பதாலும்
சீவனேஅறிவென்னிற் சீவனறிவல்லவென்று ஆன
ந்தஞ்சுருதி யிருப்பதாலுஞ் சுழுத்தியிற் சூனிய
மாயிருத்தலுஞ் சுகமாயிருத்தலுமறிகின்றசீவனு
பேட்சா வேனையில்லாதிருத்தல் பழஞ்சாட்சி

இன்றதற்காகச் சம்பளங்கொடுக்குமிராசனில்லா
விட்டால் வேலைக்காரனாலே பழுக்கவைக்குந்தொ
ழிலநடவாததுபோல அகண்டாகார அறிவானந்த
மாகிய ஆத்மாவில்லாவிட்டாற்பிரியந்தோன்றிப்
புத்திமுதலியதின் றொழில்நடத்தற் கேதுவில்லா
திருத்தல் முதலியபுத்தி யிருப்பதுமல்லாமற்பிரி
யமாதியிடையிற் றோன்றியழிதலாலும் சிவஞான
வன்ஆத்மாவினு லிவன்சிவ னென்று அறியப்படுத
லாலும் ஆட்டியடக்கப்படுதலாலும்அன்னியமா
யும்மூலப்பிரகிருதிபி ராசதகுண அவித்தையிற்
பிரதிவிம்பித்திருக்கின்ற வகையாலுற்பத்தியுள்ள
தாயும் உபேட்சாவேளை முதலானகாலத்திலில்லா
திருத்தலா மற்றகாலத்திலும் அதன்காரணமாக
அபவாதிக்கில் சிவனில்லாததால்அசத்தாயுந்தான
ல்லாததைத்தானென்று மயங்குதலாலும் ஆகாத
விடயத்திற் பிரியமோதப் பிரமோத மடைதலா
லுஞ்சடமாயும் கர்த்தாவாதியா யிருப்பதாற்றுக்
கமாயும்அவ்விருப்பு நிலையற்றதானதால் அனித்தி
யமாயும் அதனாலும் பின்னமுதலியதினாலுங்கண்
டமாயும் அறியாததன்மையினால் அசுத்தமாயும்
ஆணவத்திலிருந்து வெளிப்பட்டதான வுண்டாத
ல்முதலிய விகாரமிருக்கையால் விகாரமுள்ளதா
யும்மயங்குதல் அறிவறியாமையாயிருத்தலறியப்

மகாவாக்கியவுரை.

படுதலாற் றிரிசியமாயு மிருக்கின்ற யுத்தியிருப்ப
தாலும் என் சீவனென்பதுமுதலிய அநுபவமிரு
ப்பதாலுஞ் சீவனறிவல்லவென்பார் சீவனறிவெ
ன்றால் வவ்வியதானல்லாத வெல்லாந்தா னென
றேமயங்குமெனவும்.
சீவன்முதலியவைகளை யறிகின்ற ஞானசொரூ
பமே யறிவென்று சுருதியிருப்பதாலும் பஞ்ச
கோசங்களின் அன்னுவயவெதிரேகங்களாலுங்
கொண்டு எந்தக்காலத்திலுமிருப்பதுமல்லாமலி
துவெனமற் றொன்றினாற்சுட்டியறியப்படாமலு
ம்சுட்டியடக்கப் படாமலுமிருப்பதாற்றானும்
தானுற்பத்தி யாகின்றதற்கேது வான வேறொன்றி
ல்லாதபடியா லுற்பத்தியற்றதாயும்விருத்திமுத
லியவை தோன்றியிருந்தொடுங்குதற் கேதுவாயி
ருப்பதாற் சத்தாயும் அஷ்டப்பிர காசத்தையும்
விளக்கியறிதலாற் சித்தாயும் பொருளாதிஆறையு
ம்விட்டு விடப்படாத அதிப்பிரியவஸ்து வாதலா
தலாலானந்தமாயும் நான்குஅபாவமு மற்றுச்சுசு
தோதயமாயிருத்தலால் நித்தியமாயும் மூன்றுப
ரிச்சேதமுமற்றுச் சர்வத்திலும் சம்பந்தித்திருப்
பதாற் பூரணமாயும் சகலமுந் தன்னிடத்தில்வி
ர்த்தமாகையாற் சுத்தமாயும் என்றுமொருபடி
யாயிருத்தலால் விகாரமற்றதாயும் தன்னையறியத்

திருக்கு வேறொன்றில்லாதபடியால் அதிரிசியமா யுயிருக்கின்ற புத்திபிருப்பதாலும் நான்சர்வ லட்சணன் நான்சர்வசாட்சி நான்சர்வாதாரன்நா ன்சர்வாதிட்டானன் நான்சர்வாத்மா என்பதுரு பிய அநுபவமிருப்பதாலுஞ் சுயம்பிரகாசமா னதானே அறிவென்பார் அதைப்பகுத்தறிய வ ருவறிவறிவேயெனவுங்கூறினார்.

(இ ம்) உடலாதி அறிவல்லவென்றுணரச்சுருதி யுத்தி அநுபவங்கூறி அறிவின்னதெனத் தெரிவி த்ததாம். (௰அ)

(அ கை) முதல்வாக்கியத் திரண்டாம்பதத்திற் கருத்தக்கூறல்.

(கவி) இந்நிலையே ஞானமென்ற பதத்தினுண் மையுரைத்தோமினிப் பிரமமென்ற பதத்திலக்க ணங்கேண்மாணு, மன்னுபிரமாதி பலவுயிர்களுக் குமுபிராட்மத்தநனைப் படைத்தளித்து மாற்று தற்கேதுவுமாட்த், துன்னுபரி பூரணமாயிருப்ப தெத்தவதுவாந் தாயபதமிரண்டினுக்குஞ் சோதி யொன்றாகையினால், நன்னிலையே நமதிடத்திலறி வுமது வெனவால்ஞானமே பிரமமென நவின்ற வாக்கியமே.

(இ ள்) இந்நிலையே- இந்தமுறையே - ஞான மென்றபதத்தின் - பிரக்ஞான மென்னு முதற்

மகாவாக்கியவுரை

னபதத்தினுடைய - உண்மையெதார்த்தமான அர்
த்தத்தை- உரைத்தோம்- மொழிந்தோம் - இனி-
இப்பால் பிரமமென்றபதத்து பிரமமென்ற-விர
ண்டாம்பதத்தினுடைய இலக்கணம் - இயல்பை-
கேண்மாணு - சீடனே- கூறுதுங் கேட்
பாய் - மன்னுநிலை பெற்றிருக்கின்ற, பிரமா
தி அயன்முதலான-பலவுயிர்களுக்கும் சராசரமா
ன அனந்தசீவர்களுக்கும், உயிராய் ஆத்மாவாய்,
அதனை - அச்சராசரவுயிர்களை, படைத்துமாற்று
தற்கு-நிற்பிரதானத்தாநிமித்த காரணமாயிருந்
துசிருட்டித்து இரட்சித்து சங்கரிக்கின்றதற்குவ
துவுமாய்-ஜடப்பிரதானத்தாலுபாதான காரண
முமாய், அன்னு நிறைந்த, பரிபூரணமாய் அப
ரிச்சின்னமாய், இருப்பதெது இருக்கின்ற சொ
ரூபமியாதோ, அதுவாய்-அதுவேபிரமபதத்தில
க்கணமாம், ஓர்தேகத்திலிருக்குமறிவுஎங்ஙனஞ்சூ
ருட்டியாதிக்கேதுவாயும், பூரணமாயுமிருக்கும்
பிரமமாகுமெனின் அய - வாச்சியார்த்தமில்லா
துபரிசுத்தமாகிய பதமிரண்டினுக்கும் - பிரக்கி
யானப்பிரமமென்னுமிரண்டுபதலட்சியார்த்தத்
துக்கும்-சோதி சித்துலட்சணம் - ஒன்றாகையினு
ல் ஒருதன்மையாயுள்ளதாகையால் - நன்னிலையே
ஆனந்தமாயிருக்கிறபிரமமான்து பலவுயிர்களிட

தீ அமிருக்குமென்றமுறைமேய நமதிடத்திலறிவும் நமமிடத்தி லுள்ளஞானசொரூபமும் • அதுவெ னலால்-அந்தப்பிரமமேமென்றுவேதங் கூறுகை யினுல் ஞானமேபிரமமென-பிரக்கியானமேபிர மமென்று நவின்றதுவாக்கியம் முதல்வாக்கியஞ் சொல்லப்பட்டது எ-று மற்றென்பதுஅசை.

(ப-ம்) எழுவகைப்பிறவிச்சீவர்களைக்காட்டிலு ம் நித்தியமாயிருக்கப்பட்ட பிரமாவென்பார்ம ன் னுபிரமாதியெனவும் ஆகாசம்நான்கு பூதபவு திகங்களுக்கு முள்ளும்புறம்பும்வியாபகமாயிரு த்தல்போலச் சகலசீவர்களுக்குமுள்ளும்புறம்பு ம்பிரமம் வியாபகமாயுஞ்சரீரத்திரயத்தைவிடச் சீவன் பிரியமாயிருப்பதுபோலச் சீவனிலும் பி ரமம்பிரியமாயுஞ் சரீரத்திரயத்தைச் சீவனுட்டுவ துபோலச் சீவனைப்பிரமமாட்டுவதாயுமிருக்கின் றதென்பார்-பலவுயிர்களுக்குமுயிரெனவும் பழு தையினிடத்திற்பாம்புமுதவியவை தோற்றியிரு ந் தொடுக்கப் பழுதை யேதுவா யிருக்கின்றது போலச்சராசரப்பிரபஞ்சந்தன்னிடத்திற் றோற் றியிருந்தொடுங்குதற்குப் பிரமமிடமா யிருப்ப தென்பார் மற்றதனைப்படைத்தளித்து மாற்றுத ற்கேதுவெனவும்-மூன்றுபரிச்சேதமற்ற பூரண மாயிருப்பதென்பார்- அன்று பரிபூரணமெனவு

ம்-திரிதிவட்டியென்று உபாதியினாற்பேதமாயிரு
ந்தாலும் நெருப்பு வொருதன்மையாயிருத்தல
போலஅறிவும்பிரமமுமென்றுஉபாதியால்வேறு
போலிருப்பினும் சித்துலட்சணத்திலொரு தன்
மையாயிருக்கின்றதென்பார் பதமிரண்டினுக்கு
ம்சோதியொன்றெனவும்எங்குமுள்ளவாகாசமே
யோர்கடத்திலுள்ளஆகாசமுமாதல்போலப் பிர
மாதிசராசரங்களிலிருக்கும் பிரமமேநின்னுடை
யவோர்தேகத்திலுமிருக்கிற அறிவுமென்று வேத
ங்கூறுவதாலென்பார்-நன்னிலையே நமதிடத்தில
திவுமதுவெனலாலெனவுங்கூறினார்

- (இ-ம்.) சத்தியக்கியானவனந்தா னந்தவஸ்து
வேபிரமமெனக்கூறிக்கடாகாச மகாகாசமென்று
வுபாதியாற்பேதமாய்த் தோற்றினு மொன்றாயி
ருத்தல்போல ஞானமும் பிரமமு முபாதியால்
வேறுபோற்றோற்றினும் ஒன்றெனவயிக்கியங்

(யகஅ)

காட்டியதாம்

(அ-கை) இரண்டாம்வாக்கியவுரை கூறல்.

(கலி) வேறு அகம்பிரமாஸ்மியென்றேயறை
ந்திடும் வாக்கியந்தான், பகும்பதமுன்றதாகும்ப
ன்னியவகமேதென்னிற், சகம்பரிபூரணத்தாற்று
ன்பரமார்த்தமாகி, யுகந்தொறுமழியாதாகியொ
ன்றெருடுத்தாக்காதாகி.

(இ-ள்) அகம்பிரமாஸ்மியென்று-அகம்பிரமா ஸ்மியென்பதாக, அறைந்திடும்-இரண்டாம்வேதத்திற்கூறுகின்ற, வாக்கியம் இரண்டாவது வாக்கியத்தில், பகும்பதம் பிரிவானபதங்கள்மூன்றதாகும், அகமென்றும்-பிரமமென்றும், அஸ்மியென்றும்-மூன்றும், பண்ணிய-சொல்லியவற்றுள், அகமென்னில் அகம்பதத்தினருத்த மியாதென்றால், சகப்-பிரபஞ்சத்தில், பரிபூரணத்தால் - வியாபகமாயிருப்பதால், தான்பரமார்த்தமாகி தானென்மையாய், உகந்தொறும்-எந்நாளும், அழியாததாகி - கெடாததாய், ஒன்றேனும் - சரீராதியவொன்றின்விகாரத்திலும், தாக்காதாகி - கூடாததாய் என்றவாறு.

(ப-ம்) ஆகாயம்போற்சகத்தெங்கும் வியாபகமாயிருப்பதெப்படி சத்துவமாகின்ற கற்பிதங்கட்கு அதிட்டானமாயிருப்பதென்பார்-சகம்பரிபூரணத்தால் பரமார்த்தமாகியெனவும்-கலிமுதற்காலங்களுமதிற்றோன்றும் வஸ்துக்களும் அழிவடைந்தும் அழியாததென்பார்-உகந்தொறுமழியாதாகியெனவும்-சகத்திற்குள்ளும்புறம்புமாயிருக்குமாகாயஞ்சலவிகாரமானகுமிழியாகாததுபோலத்தேகேந்திரியப்பிராணகரண அவித்தைசிவனுக்கு உள்ளும்புறம்புமிருந்தும் அவையின் சட்பா

விசாரத்திற்கூடாததென்பார் ஒன்றொடுந் தாக்
காதாகியெனவுங்கூறினார்.

(அ-கை) இதுவுமது

(கலி) அனைத்தையுங்கடந்ததாகி யனுபவித்தறி
வதாகி, நினைத்ததேகத்தினுள்ளே நிச்சயப்படுவ
தாகி, வினைத்தசூக்குமதேகத்தை விளக்குவதாகித்
தானே, தனக்கிணையென்னலாகுஞ் சைதன்னிய
மகங்காரெனென்பார்.

(இ-ள்) அனைத்தையும் - இவன்வரைசகலத்தையு
ம், கடந்ததாகி-பொருந்தாததாய், அனுபவித்த
றிவதாகி-சுவானுபவத்தினாலுணர்வதாகி, நினைத்த
தேகத்தினுள்ளே - விசாரஞ்செய்கின்றமுமூட்சு
வின்சரீரத்திற்றானே, நிச்சயப்படுவதாகி-தானெ
னத்தெளிந்துக்கொள்ளத்தகுவதாய், வினைத்த ப
ஞ்சவிடயத்தைவிளக்கியறியப்பட்ட,சூட்சுமதே
கத்தை லிங்கசரீரத்தை, விளக்குவதாகி பிரகாசிப்
பிக்கின்றதாய், தானேதனக்கிணை - தனக்குத்தா
னேசமானம்,என்னலாகும் என்றுகூறப்படுவதா
ன, சைதன்னியம் - சித்தே, அகங்காரெனென்பார்-
அகம்பதார்த்தமெனப் பெரியோர்கள் கூறுவார்
கள்-எ-று.

(ப-ம்) சலத்திற்சம்பந்தித்திருக்கு மாகாயத்தி
ற்சலத்தினுலடைய சேதமொட்டாததுபோலநிர

நீதமாயிருப்பதாந் சரீரஇந்திரிய பிராணகரணங் அவித்தைகளுடைய சுபாவத்தைப்பொருந்தாதென்பார் அவைத்தையுங்கடந்ததாகியெனவும் சமாதியிற்றுறையிருந்து அபரோட்சமாயறியப்பட்டதென்பார் - அநுபவித்தறிவதாகியெனவும்- இதைதெய்வங்களையொவ்வொரிடத்திலன்னியமாய்க்காண்பதுபோலவின்றிச் சரீராதிகளைநீதிசெய்து விடத்திற்றுனே ஆத்மாவாகின்றதெய்வந்தானைத் தெளிந்துகொள்ளத் தக்கதென்பார் நினைந்த நேசத்திறுள்ளே நிச்சயப் படுவதாகியெனவும்-சத்தபரிச ரூபரசகந்தமான பஞ்சவிடயத்தைவிட்டுவெறியப்பட்டஆரோபப்பிரகாசமான ருட்சப்பிரபஞ்சத்தையும் பிரகாசிப்பிக்குமெரிச்சைப் பிரகாசமுடையதென்பார் வினைத்தரும் மமேசத்தை விளக்குவதாகியெனவும் தன்னைப்போர்ப்பிரானந்தலட்சணமுள்ளதுவேறில்லையென்பார். ஏனே தனக்கிணையென்னலாமெனவுங்கூறினார்

(இ-ம்) இரண்டாம்வாக்கியத்திலகமென்னு மூன்றாம் பதத்துக்குரைகூறியதாம். (உக)

(அ-கை) அக்கம்பதார்த்தத்தை யானறிந்துகொள்வதெங்ஙனமெனில்.

(கலி) இவ்வகைப்பறியுமாறுவியம்பதுமஞ்ஞா

ளத்தான், மூன்னகமென்றவுன்னை மூடித்தேய
கமாங்கண்டா, யென்னைமனையென் பாய்போ
லென்னுடலென்றுகாணி, லன்னதேகத்தைவேறு
பறித்ததிந்திரியந்தானும்.

(இ-ள்) இன்னவை இவ்வகம்பத அருத்தத்தை,
அறியுமாறு-தெரிந்துகொள்ளும்விதத்தை;இயம்
புதும் கூறுகின்றேம். அஞ்ஞானத்தால்- அறியா
மையினாலே, மூன் பூர்வமக்கியானதிசையில்,அக
மென்ற-தேகேந்திரியாதிகளை நானென்ற,உன்னை-
சிதாபாசனை உன்னை, மூடித்து கெடுத்தவிடத்தி
ல், அதே-சேஷிக்கின்றசைதன்னியமெதுவோ வ
துவே, அகமாங்கண்டாய்-அகம்பதத்துக்கு அரு
த்தமாகுமறிந்துகொள்வாய், அவ்வகம்பதார்த்த
த்தை-வேறுபடுத்தியறிவதெங்ஙனமெனில், என்
னை எனதுமாதா, மனை எனதுமனைவி என்பா
ய்போல என்றனக்கன்னியமாய் நீயிசைக்கின்ற
துபோல, என்னுடலென்று எனதுதேகமென்று,
காணில்-உனக்கன்னியமாய்க் காண்பாயாகில், அ
ன்னதேகத்தை - அத்தன்மையானசரீரத்தை, வே
றாய் அன்னியமாய், அறிந்தது- தெரிந்தது இந்
திரியப்-பொறிகள், தானும் - அவைகளியாகும்-
என்றவாறு.

(பம்) அறியாமையால்மாதாபிதா மனைவி மு

தலியவர்களைத்தானாகக்கருதி அவர்கள்படுஞ் சுக
துக்கத்தையுறுகின்ற அஞ்ஞானியானவன் அறியா
மைநீங்கி வேறாகக்கண்டபோது சுகதுக்கம் நீங்கல்
போலஅறியாமையாற்றானென்றிருக்குந்தேகமு
தற் சீவன்வரையுள்ளதைத்தனக்குவேறெனக்கண்
டாலவற்றால் வருஞ் சுகதுக்கமற்ற சாட்சியேயா
வாயென்பார் அஞ்ஞானத்தால் முன்னகமென்ற
வுன்னை முடித்ததேயகமாங்கண்டாயெனவும்தே
கம் நானென்பதென்றுகருதியிருப்பதினாலும் தீ
ப்பட்டவிடத்திற் புத்திரமித்திரதாராதிகளை விட்
டு நான்பிழைக்கவேணுமென்று வோடிப்போயு
டலைக்காக்கின்றயுத்தியினாலும் நானின்னவர்ணச்
சிரமம் நாமரூபஊர்முதலியதுடையவனென்று
பேசுமநுபவத்தினாலும் சரீரமேநானென்பதே
லென்னில் சரீரம் நானென்பதல்லவென்றுணர்ந்துங்க
ருதியிருப்பதினாலும் தூளிக்காற்றுகொசுகு முத
லியவுற்றவிடத்திற் சரீரத்தைவிட்டு இந்திரியங்க
ளைப் பதனப்பண்ணுகின்றபடியால் அன்னியமா
யும் பதினெட்டாம்பாட்டின் பதசாரத்தில் காட்
டியிருக்கின்றபடி உற்பத்தியுள்ளது அசத்து சட
ம் துக்கம் அனித்தியம்கண்டம்அசுத்தம்விகாரமு
ள்ளது நிர்ச்சயமாகவிருக்கின்றயுத்தி யிருப்பதனா
லும் என்தேகமின்னவர்ணச்சிரமம் நாமரூபஊ

ர்முதலியதுடையதென்று பேசுமனுபவ மிருப்பதாலும் தேகம் நானென்பதல்ல இந்திரியநானென்பதாமென்பார் என்னை மனை யென்பாய்போலென்னுடலென்று காணிலன்ன தேகத்தைவேறுயறிந்ததிந்திரியந்தானுமெனவுங்கூறினர். ()

(அகை) இதுவுமது

(கவி) இந்திரியமகமென்றாலு மென்கணென்காலென்கையென், றந்தமுட்கரண நீயாயுன்மனமென்கையாலே, யந்தவுட்கரணந்தானுமகற்றியசீவனீயாய்ச், சந்ததமென் சீவன்றனென்கையாற்சாட்சியாவாய்.

(இ-ள்) இந்திரியம்-வாக்காதிதசேந்திரியங்களை, அகமென்றாலும் - நானென்றுசொல்லுவையேயாலும், என்கண்-எனது நேத்திரம், என்கால்-எனதுபாதம், என்கை எனது கரம், என்று என்பதுமுதலாகக்கூறி, உர்தும்-வேறாக நீக்குகின்றபடியால், உட்கரணம் - அங்ஙன நீங்குமந்தக்கரணங்கள், நீயாய்-நீயாவாய், அவ்வகக்கரணங்களையானென்பையாலும், உன்மனமென்கையால் உனதுள்ளமென்றனக்கன்னியமாகக் கூறுகின்றபடியால் அந்தவுட்கரணந்தானும் அவ்வகக்கரணத்தையும், அகற்றிய வேறாக்கிய, சீவன்-சிதாபாசன்

நீயாய்-நீயாவாய், சிவனேயானெனப் பகருமை யாலும், சந்ததம்-எப்பொழுதும், என்சிவன்-எனதுயிர், என்கையால்-என்றனக்கன்னியமாயி யப்புவதால், சாட்சியாவாய்-சிவசாட்சியே நீயாவாய்-எ-று.

(ப-ம்) இந்திரியங்கள் நானென்பதென்று சுருதியிருப்பதாலும் ஆக்கினைவந்தவிடத்தில்அடித்தல் விலங்குபோடுதல் செய்து இந்திரியச்சேதஞ் செய்யாதென்னைக்காப்பாற்றென்று இந்திரியங்களைப்பேணிக்கொள்ளுகின்றயுத்தியினாலும் நான் கண்டேன் கேட்டேன் நான்குருடன் செவிடன் தான்கொடுத்தேன் நடந்தேன் நானொண்டி, கைமுடவன் என்பது முதலியவனுபவமிருப்பதாலும் இந்திரியங்களே நானென்பதென்னில் இந்திரியங்கள் நானென்பதல்லவென்று அனந்தஞ்சுருதியிருப்பதாலும் யோசனைகாலத்திற் பத்திந்திரியங்களையுநிக்கிரகப்பண்ணிஅந்தக்கரணத்தைப்பேணுகிறபடியாலன்னியமாயுஞ் சூட்சுமபூத சத்துவாசதகுணவியட்டியிலுற்பத்தியானதாயும், முன்பின்னில்லாமல் மத்தியகாலத்திலும் அபவாதிக்கில்லாததாலசத்தாயும் மனோராச்சிய முதலிய காலத்திற் சத்தாதிவசனாதிவிடயத்தை யறியாமையாலும் ஒரிந்திரியமற்றவிந்திரியங்களையு மவற்றி

ன்விடயங்களையும் அறியாமையாலும் சடமாயும்
வெறுப்பானசத்தாதி விடயத்தையறிதல் வசனாதி
தொழிலைச் செய்தலாலும் - விருப்பானவிடயத்
தையறியாமை, தொழிலைச் செய்யாமையாலுந்
துக்கமாயுஞ்செவியாதி ஊமையாதியாய்ப்போ
தல்கனவாதியில்நீங்குதல் சத்தாதியையறிவதுவச
னாதிதொழிலைச்செய்வதோய்தலால்அனித்தியமா
யுங்காதுமுதலிய வாய்முதலிய தானத்தில வேறு
வேறுயிருப்பதாற்கண்டமாயும் அருவருப்பான
சத்தாதியையறிதல் வசனாதிதொழிலைச் செய்தலா
ல் அசுத்தமாயும் நினைவெழும்போ துண்டாதல்
முதலியசட்பாவ விகாரமுள்ளதாயும் சத்தமுதலி
யதறிதல் அறியாமைவசனாதிதொழிற்செய்தல்செ
ய்யாமை தெரிவதாற்றிரிசியமாயுமிருக்கின்ற யுத்
தியிருப்பதாலும் என்கண்காது கண்டுது கேட்டு
துகுருடுசெவிடெனவும்என் கைகால் கொடுத்தது
நடந்தது தொண்டி முடமெனவும் பேசுமனுப
வமிருப்பதாலும் இந்திரியங்கள் நானென்ப தல்
ல அந்தக்கரணங்கள் நானென்ப தாகுமென்பார்
இந்திரிய மகமென்றும் மென்கணெண்கா லென்
கையென்றுந் துமுட்கரண நீயாமெனவும்-அந்தக்
கரணம்நானென்பதென்று கருதியிருப்பதாலும்
அந்தக்கரணங்களுக்குத் துக்கம்வரும்போது நா

க்காயிருக்க வேணுமென்று துன்பத்துக்கே
துவான இந்திரியங்களை நீக்குகின்றயுத்தியிருப்ப
தாலும் நானிச்சாவான் புத்திமான் என்பது முத
லியவநுபவமிருப்பதாலும் அந்தக்கரணமே நா
னென்பதெல்லாம் அந்தக்கரணம் நானென்ப த
ல்லவென்றுணர்ந்து கருதியிருப்பதாலுஞ் சுழுத்
தியாங் காலத்தில் அந்தக்கரணத்தை நீக்கிச் சிவ
னைப் பெறுகையால் அஃதியமாயும் பதினெட்
டாம்பாட்டுப்பதசாரத்திற் காண்பித்திருக்கின்ற
படியுக்தியுள்ளது அசத்துசடதுக்கம் அனி
த்தியங்கண்டம் அசுத்தம் விகாரமுள்ளது, திரிசி
யமாயிருக்கின்ற யுக்தியிருப்பதாலும் என்னந்
தக்கரண மசத்துமுதலிய துடையதென அநுப
வமிருப்பதாலும் அந்தக்கரணம் நானென்பதல்
லவென்றானென்பதாகுமென்பார். உண்மைமெ
ன்னையாயின் அந்தக்கரணந்தானுமகந்திய சிவ
னியாமெனவச் சிவன் நானென்பதென்று கருதி
யிருப்பதாலுஞ் சிவனுக்குத்துக்கம்வரும்போது
நாஞ்சுகமாயிருக்கவேணுமென்று துன்பத்துக்கே
துவான அந்தக்கரணத்தைநீக்குகின்றயுத்தியிருப்
பதாலும் நான்கர்த்தா போக்தாவென்று பேசல்
முதலியவநுபவமிருப்பதாலும் சிவனே நானெ
ன்பதெல்லாஞ் சிவன் நானென்பதல்லவென்றுண

தஞ் சுருதி யிருப்பதாலும் மரணகாலத்திலுந்
தற்போதமாய்க்குங் காலத்திலும் சிவனைநீக்கி ஆ
த்மசுகத்தைப்பேறுகையால் அன்னியமாயும் ப
னெட்டாம்பாட்டின் பதசாரத்திற் காண்பித்தி
ருக்கின்றபடி உற்பத்தியுள்ளது அசத்துசடம்துக்
கம் அனித்தியம் கண்டம்அசுத்தம் விகாரமுள்ள
து திரிசியமாகவிருக்கின்ற யுத்தி யிருப்பதாலும்
என்சிவனென்பதுமுதலிய அனுபவ மிருப்பதா
லும் சிவன்நானென்பதல்ல சாட்சியே நானென்
பதென்பார் சந்ததமென்சிவன் றானென்கையாற்
சாட்சியாவாயெனவுங்கூறினார்.

(இ-ம்) தேகாதியகம்பதார்த்தமல்லவென்றுண
ர்ச்சுருதியுத்திஅனுபவங்கூறினதாம். (உரு)

(அ-கை) இரண்டாம் வாக்கியத்தில் அகமென்
னு முதற்பதத்தருத்தமிதுவெனக்கூறி யிரண்டா
ம்பதத்துக்குரைகூறல்.

(கலி) அப்படியெல்லாநீக்கியறிவதேயகமாங்க
ண்டாய், செப்பியபிரமமென்னச்செறிபதந்தா
னேதானாய், யொப்புயர்வற்றுவேறுருபாதியற்ற
கண்டரூபந், தப்பிலாப் பூரணத்தாற் சச்சிதான
ந்தமாமே.

(இ-ள்) அப்படி - முற்கூறியபிரகாரம், எல்லா
ம் தேகமுதல் சீவன்வரையனைத்தையும், நீக்கி-வே

ரூக்கி, அறிவதே-உணருகின்ற தெதுவோவதுவே, வுகமாக்கண்டாய்-அகம்பதார்த்தமென்று தெரிந்துகொள்வாய், செப்பிய-முன்சொல்லிய, பிரமமென்ன-பிரமசொரூபமென்பதாக, செறிபதம்-பொருந்தாநின்றசொல்லுக்கருத்த மியாதெனில், நாளெதானாய்-காரணமற்றுத்தானா யிருக்கின்றதாகி, ஒப்புயர்வற்று-சமானாதிகமின்றி, வேறோருபாதியற்று-அவ்வியமாகியவோருபாதியுமின்றி, அகண்டரூபம்-கண்டிக்கப்படாத சொரூபமாய், தப்பிலா-கெடாத, பூரணத்தால்-வியாபகமாய், சச்சிதானந்தமாம் - அஸ்திபாதிப்பிரிய சொரூபமாகுமே-என்றவாறு.

(ப-ம்) தூலசரீரம்பூதங்கள் சூட்சுமபூத பவுதிகங்கள் அவித்தையாவிசிட்டன் மாயாவிசிட்டன் ஒவ்வோருக்குமேலொன்று காரணமா யிவைகட்குச் சுத்தசைதன்னியமான தான்காரணமா யிருத்தல்போற் றனக்கு வொருகாரணமுமின்றியிருக்கின்ற அகாரணமென்பார் தானேதானென்வும் - மாயைமுதலிய உபாதியற்றதென்பார் வேறோருபாதியற்றதெனவும் - லோகசித்தாந்தம் அருகனாதியாகமம்-தேவகர்த்தருவாகமம்-அபனாகமம்- அரியாகமம்-அனாகமம்-புராணம்பாரதம் நீதிசாரங்கள்மகாண்டம் பத்திகாண்டமாகிய இவைகள் போல மேலொ

ல்றீறுற்கண்டிக்கப்படாத உபநிடதநிச்சயித்த சச்
சிதானந்தசொரூபமென்பார் அகண்டரூபமென
வும்-ஆகாசாதிகளைப்போற்கெடுதலில்லாத வியாப
கமென்பார் தப்பிலாப்பூரணமெனவும் - பழுதை
யைப்போலச் சிருட்டிக்குமுன்னும்-பிரளயத்துக்
குப்பின்னும் மத்தியிலுமிருப்பதென்பார் சத்தெ
னவும் - சூரியன்போலத்தானுஞ்சுயம்பிரகாசமா
யிருந்து சிருட்டிமுதலுண்டாகப்பட்டதுகளெல்
லாம் விளக்குவதென்பார் சித்தெனவும்-அமிர்தம்
போலத்தானுமானந்தமாயிருந்து தன்னையடுக்கு
ம்விருத்திக்குச்சமாதி சுழுத்திவிடயானந்தங் கொ
டுப்பதென்பார் ஆனந்தமெனவுங்கூறினார்.

(அ-கை) இரண்டாம்வாக்கியத்திற் பிரமபதத்த
ருத்த மிதுவெனக்கூறி மூன்றாம் பதத்துக் குரை
கூறல்.

(கவி) இவையதுவஸ்மியென்னு மீறுளபதார்த்
தஞ்சொல்லிற் சுவைதரு மயிக்கியமாகித் துவிதத்
திலுபாதியற்றுப் பவமகற்றறிவானந்தப்பரங்கட
லாகுமென்றே தவவடிவான ஞானத் தலைவர்களு
ரைப்பார்தாமே.

(இ-ள்) இவை-இங்ஙனங்கூறியது, அது-பிரமப
தார்த்தமாம், அஸ்மியென்னும் - அஸ்மியென்கின்
ற, ஈறுளபதார்த்தம்-அந்தத்திலுள்ள சொல்லுக்கரு

ஜீதம், சொல்லில்- அதைப்பகருமிடத்தில், துவித
த்தில்- அகம்பதம்பிரமபதமிரண்டிலுமுள்ள, உபா
தியற்ற-வாச்சியார்த்தங்கணீங்கி, சுவைதரும்-ஆன
ந்தரசத்தைக்கொடுக்காநின்ற, அயிக்கியமாகி - ஏக
மாகி, பவமகற்று-சன்மமரணத்தைநீக்குகின்ற, அ
றிவானந்த-சிற்சுக, பரங்கடலாகுமென்று-திவ்விய
நித்தியவாயிருக்குமென்பதாக, தவவடிவான - தவ
சொரூபிகளான, ஞானத்தலைவர்கள்- பரஞானிகள்
உரைப்பர்-ஓதுவார்கள்-எ-று.

(ப-ம்) தேவதத்தன் ஒருவனாயிருப்பது போல
வும் கடாகாசமும் மகாகாசமுமேகமாயிருப்பது
போலவும்-இரண்டுபதவாச்சியமும்நீங்கி இலட்சிய
மான அசங்கநிவர்த்தியாகிய ஏகமாயிருக்குமென்
பார்சுவைதருமயிக்கியமாகித்துவிதத்திலுபாதியற்
றனவும்-மனுடானந்தமுதலிய பதினொருவகை
யாகிய ஆனந்தமும்பிறவிகொடுப்பதாய்ச் சடமா
ய்த்திவலைபோலிருப்பதால் அவையல்ல பிறவிநீ
க்குவதாயவிகாரப்பிரளயகாலவெள்ளம் போன்றி
ருக்கும் அகண்டாகாரசொரூபமென்பார் பவமக
ற்றறிவானந்தப்பரங்கடலெனவும்- சுபேட்சையா
தி ஞானபூமி மூன்றினப்பியாசமாகிய தவத்திற்கு
மேலானநாலாவது சத்துவாபத்தி முதலிய பூமிய
னுபவத்தை யடைந்து ஆத்மசாட்சாத்கார முடன்.

போதிக்கும் வல்லமையுடையவர்களெல்லார், தவ
வடிவானஞானத்தலைவர்களெனவுங்கூறினார்.
(வி-ம்) சுபேட்சையாதிமூன்றுமூடியினைப்பியா
சமெங்ஙனந்தவமென்னில்- பஞ்சாக்கினி மத்தியா
திதபசைத் தவமென்றும் அதைச் செய்தோர்க்குச்
சொர்க்காதிலோகமுண்டென்றுங் கூறிச்சொல்லு
வதுபோலச் சுபேட்சையாதிமூன்றுமூடியப்பியா
சத்தைச் சத்துவதவமென்றும் அதை யப்பியாசித்
தோருக்குஞானம்வருமுன்சரீரம் நீங்கிப்போனு
ற்சொர்க்காதிலோகமுண்டென்றுங்கூறிச் சொல்லு
வதாவதுமேலானதவமெனக்கொள்க.
(இ உ-கவி-ம்) ஆகாரனை அத்துவித அகண்டஅப்
ரிச்சின்ன அஸ்திபாதி ப்பிரிய சொரூபமே பிரம
மெனவும் வாச்சியநீங்கிய அகமும்பிரமமும் அபி
க்கியமாகிய அகண்டாகாரசொரூபமே அஸ்மிபதா
ர்த்தமெனவுங்கூறினதாம். (உரு)

(அவதாரிகை.)

மூன்றும் வாக்கிய வுரைகூறல் - வேறு.

(கவி) தத்வமசிவாக்கியந்தான் பதமூன்றுமதிலே
துற்பதத்தின் பொருளுரைப்பாஞ்சமைத்தவொரு
கடந்தா, னித்தகைமைபெறுமுன்னங்கொருவடிவ
ங்கதுபோலிருப்பனவும் வேற்றுமையா யிருப்ப
னவுமல்லிச்- சத்தாகித்தமதாகிப்பெயர்தாணுமின்

ரித் தானேதானாயிருந்த சைதன்யம்போல - வந்த
லைகமைபெட்பொழுதும் பெற்றிருக்குஞ்சத்திய
வீர்வசனமாய் விளங்குமதுபிரமமாமே.

(இ-ள்) தத்துவமசிவாக்கியம்-தத்வமசியென்னு
மூன்றும்வாக்கியமானது - பதமூன்றும், தத்தென்
றும்-துவமென்றும் - அசியென்றும்-மூன்றுபதமு
டையதாம்-அதிலே-அவற்றுள், தத்பதத்தில்தத்தெ
ன்னுஞ்சொல்லின்-பொருள்-பயனை-உரைப்பாம்-
அறைகிற்றேம்-சமைத்த - உண்டாக்கிய- ஒருகட
கம்-ஓர்குடம் - இத்தகைமை - இந்தகடத் தன்மை
யே-பெறுமுன், அடைவதன்முன்னிருந்த-அங்கொ
ருவடிவு-அவ்விடத்தொட்பற்ற வுருவமாகிய மண்
ணனது - அங்கதுபோல - அவ்விடத்தும்மண்போ
ல - இருப்பனவும் - இருக்கின்றதும் - வேற்றுமை
யாய்-அதற்குமாறுபட்ட - இக்கடவடிவமாய்-இரு
ப்பனவும்-இருக்கின்றதும், அன்றி-அல்லாமல்-உண்
மையாயும்தன்மையாயும் - நாமமற்றதாயும் தன்
மாத்திரமாயுமிருக்கின்ற பிசைந்த மண்மொத்தை
போலவும்-சத்தாகி-மெய்யாகியும் - தமதாகி-தன்
மயமாகியும் - பெயர்தானுமின்றி - நாமமில்லாத
தாகியும், தானேதானாயிருந்த-தான்மாத்திரமாகியு
முள்ள-சைதன்னியம்போல ஆஷிணீம்பூதகொரு
டம்போலவும் - அத்தகைமை- அந்தத்தன்மையமா

மகாவாக்கியவுரை.

தன்மையை - எப்
யுந்தான்மாத்திரமா யிருக்கின்ற
பொழுதும்- எக்காலமும் - பெற்றிருக்கும்- பொ
ருந்தியிருக்கின்ற, சத்தாய்- உண்மையாய்- அனிர்வ
சனமாய்வாக்குமனதுக் கெட்டாததாய்-விளங்கும்-
பிரகாசிக்கின்றது எதுவோ-அது-அஃதே-பிரமமா
ம்-தத்பதார்த்தமாகிய பிரமசொரூபமாம்-எ-று.
(ப-ம்) விருத்தி நட்டமானபின்னு முண்டாகு
முன்னுமிருக்கப் பட்டதென்பார்- சத்தாகியெ
வும் - ஆகாயம்போலவிருத்தியின் கலப்பற்றதென
பார்- தமதாகியெனவும்- பஞ்சவிடயத்திலொருவி
தமாயாவது சுட்டியறியக்கூடாதிருக்குஞ் சொரூ
பமென்பார் பெயர்தானுமின்றியெனவும்- ஆகா
யந்தனியே யிருக்குமாப்போல விருத்தியின் சங்க
மற்றதென்பார்தானே தானாயெனவும்-மாயையவி
த்தைகலப்பற்றதாயு மிரண்டாம் வஸ்து வற்றதாயு
மெப்போது மிருக்கப்பட்டதென்பார்- அத்தன்மை
யைப்பொழுதும் பெற்றிருக்குமெனவும்-சிரு
ட்டிக்குமுன்னும் பிரளயத்துக்குப் பின்னுமிருக்க
ப்பட்டதென்பார் சத்தாயெனவும் - அக்கிரியமா
யச்சத்தாய் விளங்குவதென்பார் - அனிர்வசனமா
ய்விளங்குமெனவுங் கூறினார்.
(இ-ம்) சுயம்புவாய் அத்துவிதமாய்ச்சதோதய
மாய்க்கிரியமா யிருக்கின்றபிரமமே மூன்றும்வா

ஷிபத்தில் தத்தென்னு முதற்பதத்துக் கருத்தமெ
னக்கூறியதாம். (௨௫)

(அ-கை) மூன்றாம்வாக்கியத்தின் மூன்றுபதத்தி
ற்குஞ் சங்கிரகார்த்தங்கூறல்.

(கலி) இன்னமுந் தத்பதம்விளங்குமேதுவெலா
முரைப்பே மிப்பதத்தின் பொருளது தொம்மென்
றியம்பல்சீவ - னன்னபதமிரண்டினுக்குமைக்கிய
மசியென்ப ரவைகளுபாதியினீற் றறிந்தைக்கமும்
பெற்றனங்கள், னல்லுசகதீசனுக்குஞ் சகலபிரா
ணிகடன்றாலமே தாலமவர்க்குமபேதுக்க-மின்
னிமறைத்திமாயை காரணமா மிதனை மெருக்கித்
தானைவிளக்கியதுபிரமம்.

(இ-ள்) இன்னமும் - மேலும் - தத்பதம் - தத்ப
தத்தினருத்தம் - விளங்கும் - தெரியும்படியான -
ஏதுவெலாம் - வகையனைத்தும் - உரைப்போம் - தெ
ளிவிப்போம் - இப்பதத்தின்பொருள் - இந்தத்
தத்தென்னும் பதத்தினருத்தம் - அது - அந்தப்பிர
மமெனவும் - தொம்மென்றியம்பல் - தொம்மென்
று சொல்லப்படுகின்ற பதத்தினருத்தம் - சீவன் - உயி
ரெனவும் - அன்னபதமிரண்டினுக்கும் - அந்தத்
த்வமென்னு மிருபதங்களுக்கும் - ஐக்கியம், ஏக
த்துவமே - அசியென்பார் - அசிபதத்தினருத்தமெ
னவும் மகான்கள் கூறுவார்கள்; தத்பதத்துவம் பதி

மகாவாக்கியவுரை.

மயிக்கமாதலெங்ஙனமெனில் - அவைகள்-அந்தத்
தத்பதத்தி னருத்தமாகிய பிரமமும் துவம்பதத்தி
னருத்தமாகிய கூடத்தரும் - உபாதியினிற்பிரிந்து
விராட்டாதி யொன்பதும்- தூலாதி யொன்பதும்
ஆகிய வாச்சியங்களினின்றுநீங்கி - ஐக்கியமும்-
ஏகத்துவமும்-பெற்றது- அடைகின்றது-கேள் -யா
ங்கூறுதுங்கேட்பாய் - நல் ஞானசகதீசனுக்கு- நிறை
ந்தசகத்கர்த்தனாகிய அந்தரியாமிக்கு - சகலபிரா
ணிகடன் தூலமே - சீவர்களனைவரில் தூலதனுவே-
தூலம்- விராட்டாகிய தூலசரீரமாம் - அவர்களுக்கு
மமே- அவ்வுயிர்களினிலிங்க சரீரமே- சூக்கம்-இர
ணியகர்ப்பமாகிய சூட்சுமசரீரமாம்-மன்னிமறை
ந்திடும்-தோன்றி நீங்குகின்ற-மாயை - மாயையே-
காரணமாம்- அவ்வியாகிருதமாகிய காரணசரீரமா
கும்-இதனை-இச்சரீரத்திரயாதி வாச்சியங்களை-வே
றுக்கி-விலட்சணைப்படுத்தி -தானுக-லட்சியமானதா
ன்மாத்திரமாக- விளங்கியது-பிரகாசிக்கின்றது-பிர
மம்- பரப்பிரமசொருபமாம்-எ-று.

(ப-ம்) அவஸ்தாத்திரயங்கள் கெட்டுங்கெடாமற்
சீவித்துக்கொண்டிருக்குங் கூடத்தரெல்பாரி- சீவ
னெனவும்- சராசரங்களிலெல்லாநிறைந்திருக்குஞ்
சர்வக்ஞத்துவஞ்சர் வேசுரத்துவஞ்சர்வ நியந்திரு
த்துவஞ்சர் வாந்தரியாமித்துவஞ்சர்வகர்ப்பித்துவ

ம்-சர்வசக்தித்துவ மாகியசட்குண அயிசுவரியசம்பன்னனென்பார் - தன்னுசெகதீசனெனவும் - ஆராத்துவமாய் வெளியாய்க்காணப்பட்டதென்பார் - தூலமெனவும் - இருபதித்தத்துவமாயனு மானத்திலே காணப்பட்டதென்பார் - சூக்குமமெனவும் - மேகத்திற்றோன்றியழியுமின்னல்போலத் தன்னிடத்தில் விவர்த்தமாய்த் தோன்றி யழியப்பட்டமாயையென்பார் - மின்னிமறைந்திடு மாயையெனவும் - இவ்விரண்டுசரீரத்துக்கு மேதுவென்பார் காரணமெனவும் - விராட்டுஇரணியகருப்பம் - அவ்வியாகிருதம் - சிருட்டிதிதிசம்மாரம் - வைசுவாநரன் சூத்திராத்மா - அந்தரியாமியாகியவிவைகளைநீக்கியென்பார் இவைவேறாக்கியெனவும் - ஈசுவரன் வரைக்கும்மாயாசபளிதப்பிரமமாகையால் அவைநிருபாதிகப்பிரகாசப் பிரமமென்பார் - தானுகவிளங்கியதுபிரமமெனவுங்கூறினர்.

(இ-ள்) தத்துவமசியென்னுமூன்றுபதத்தின்சங்கிரகார்த்தங்கூறி அவிக்கக்கூறும்பொருட்டுத்தத்பதத்தின் வாச்சியார்த்த லட்சியார்த்தந்தெரிய விஸ்தாரமாக்கூறியது. (உஎ)

(அ-ரை.) தொம்பதவாச்சிய லட்சியார்த்தமியாதெனில்.

(வி) தேகாதிகளை யுணர்கிற்றன்னைவேறால

மகாவாக்கியவுரை.

தூலகருவி சூக்குமமாங்காரணமஞ்ஞானந்-தாவு
மிதனபிமானி சீவனிவையணுகாச் சாட்சியதுதொ
ம்மென்றேசாற்றிய கூடத்தர் - காவலவன்சிவனெ
ஞுமுபாதியெலாநீக்கிக்கலப்பதுவேயசிபதமாய்ச்
சாட்டுமதுநீங்கும்-பாவனையுமயிக்கியமாம்பண்பு
ம்விதியே பகுத்துரைப்பர் பெரியோர்கள் பஞ்
குவரானவர்க்கே.

(இ-ள்) சீவவுபாதியையுரைக்கில் - சீவனதுபாதி
யைக்கூறுமிடத்து - தன்னவேதூலம்- தன்மேத்த
மட்டுந்தூலதேகமாகும் - ஸ்தூலகருவி - இருபதுதத்
துவங்களே - சூக்குமமாம் - இலிங்க சரீரமாகும்-
காரணமஞ்ஞானம் - அவித்தையேகாரணசரீரமா
கும்-தாவுமிதனபிமானி-இச்சரீரத்திரயங்களைப்பற்
றி அபிமானிக்கின்றவன் - சீவன் - சிதாபாசனாகும்-
இவையணுகா - வாச்சியமானவிச்சீவனையுஞ்சரீரா
தியையும் நீங்கி,சாட்சி-லட்சியார்த்தமானசீவசா
ட்சியே - தொம்மென்று- தீயென்று-சாற்றிய-சொ
ல்லப்படுகின்ற-கூடத்தர் - பிரத்தியேகாத்மாவாகு
ம்-அசிபதார்த்தமியாதெனில்-காவலவன்சிவனெ
னும்- ஜகத்ரட்சகனைவீசனாதி சிதாபாசனாதியெ
ன்கின்ற-உபாதியெலாப்- வாச்சியங்களைத்துப்-
க்கி- வேறாகி- கலப்பதுவே- லட்சியார்த்தமானபி
ரமகூடத்தரொன்றாயிருந்ததுவே-அசிபதமாய்-அசி

பதார்த்தமாக-காட்டும்-வேதந்தெரிவிக்கும், வாச்சி
யநீக்கிலட்சிய மயிக்கமாதலெனக்கனுபவமாகும்
வகைகூறவேண்டுமெனில் - அது நீங்கும்- அவ்வாக்
கியங்கள்வேறுகின்ற- பாவனையும்-பாவித்தலும்-ஐ
க்கியமாம்-அந்தலட்சியங்களொன்றுகின்ற பண்
பும்-விதமும் - பெரியோர்கள்-சத்துக்கள்-பக்குவ
ரானவர்க்கே - பருவமுற்றமாணாக்கருக்கே - விதிவ
ழியே- முறைப்படியே-பகுத்துரைப்பார்-விரிவா
ய்க்கூறுவார்கள்-எ-று.

(ப-ம்) சாட்சிக்காரன்போல சீவன் பஞ்சகோச
த்திற்றாதாத்மியப்படுவதைப்பற்றாதறிந்துதெரிவி
க்குமதனையென்பார் இவையனுகாச்சாட்சியெனவும்-
அலைகள்ளான நீர் விகாரமாயிருத்தல்போலச்ச
த்துவகுணகாரியமான வைராக்கியாதியும்-ராசதகு
ணகாரியமான காமாதியும்-தாமதகுண காரியமான
சோம்பலாதியுந்தோன்றி யொடுங்குதற்கு ஏதுவா
ய் நிர்விகாரியாய் விளக்கப்பட்டதென்பார் கூடத்
தனெனவும்-இராசாவானவன் சட்டமேற்படுத்திக்கு
டிகள் நன்மைபண்ணும்படிக்குஞ்செய்வதுந்தீமை
